# உ ள் ளு றை ற.

துன்முகி 1956-57. துணர் ௩௨. மலர் ௧—௰௨.

பக்கம்.


1. பொழிற்றொண்டர் கருத்துரைகள் 1
2. கரந்தைக் கோவை
வித்துவான், ச. பாலசுந்தரம்
3, 57, 85, 105, 153, 168, 219, 255, 275.
3. எல்லாராய்ச்சியும் சொல்லாராய்ச்சியா?
ஞா. தேவநேயப் பாவாணர் M. A. 9
4. "ஒப்பில் வழியாற் பொருள்செய்குந"
வித்துவான், திரு. அடிகளாசிரியர் 18
5. தமிழ் இலக்கிய மரபுகள்
இரா. இளந்திரையன் B. A., Hons 24, 48
6. 'புயல்'
புலவர், R. ஏகாம்பரநாதன் 29, 52, 78
7. தேவாரப் பண்களின் கட்டளைவிளக்கம்
V. S. கோமதிசங்கரய்யர் 33
8. அருள்நெறியில் திருவள்ளுவர்
வித்துவான், ந. இராமநாதன் 45
9. அறமுரைத்த அண்ணல்
கு. சிவமணி B. A., (Hons) 65
10. தமிழுலகிற் பொன்றொளி
பொழிற்றொண்டர் 72
11. நிகழ்கால வினைவடிவம்
ஞா. தேவநேயப் பாவாணர் M. A., 74
12. தமிழ் இலக்கியப் பண்புகள்
இரா. இளந்திரையன் B. A., Hons 91, 101

13. மதிப்புரைகள் 96, 178, 250, 378

14. கூடுவிட்டுக் கூடுபாய்தல்
இரா. இளந்திரையன் B. A., (Hons) 97

15. நிகழ்கால வினையெச்சம் எது?
ஞா. தேவநேயப் பாவாணர் M. A. 102

16. ஒட்டக்கூத்தர் மடையனைத் தண்டஞ்செய்ததை விலக்கப் பாடியது
வித்துவான், திரு. அடிகளாசிரியர் 108

17. திருவாடானை ஸ்ரீ சிநேகவல்லியம்மை இரட்டைமணிமாலை
மு. ஐயாமணி என்னும் ஈசானசிவாச்சாரியார் 113

18. 'திருவாலங்காடு' கல்வெட்டுச்செய்திகள்
வித்துவான், வை. சுந்தரேச வாண்டையார் 116

19. 'பிரிவுந் துயரமும்' பொழிற்றொண்டர் 122

20. மகிழ்ச்சி „ 128

21. இந்திய விடுதலை இயக்கத் தந்தை
கு. சிவமணி B. A., (Hons) 129

22. அகில உலகத் தமிழ்க் கலைமன்றம்
கா. போ. இரத்தினம் M. A., 132

23. 'கையறுநிலை'
அ. பெ. அழகராயப் பிள்ளை 134, 179

24. யாரை யார் படைப்பது
இரா. இளந்திரையன் B. A., Hons. 137

25. திருவண்ணாமலைக் கல்வெட்டுப் பாடல்
வித்துவான், வை. சுந்தரேச வாண்டையார் 142, 233, 260

26. கால்டுவெல் கண்காணியாரின் சருக்கல்கள்
ஞா. தேவநேயப் பாவாணர் M. A., 146, 161

27. ஒழுக்கநெறியில் வள்ளுவர்
வித்துவான் ந. இராமநாதன் 157

28. கையறவு
பொழிற்றொண்டர் 160, 179

29. செல்வக் கடுங்கோ
பேராசிரியர். ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை 169, 201

30. எந்த வழியாக வந்தீர்
இரா. இளந்திரையன், B. A. Hons. 175

31. கம்பன் கவிகளின் தனிப்பெருமை
வித்துவான். வை. சுந்தரேச வாண்டையார் 180

32. மன்னனும் மங்கலவாழ்த்தும்
திரு. ம. பிள்ளையார் 185

33. கலைமகள் விழா
பொழிற்றொண்டர் 193

34. வேள் எவ்வி
வித்துவான். ச. பாலசுந்தரம் 194

35. சுந்தரர் காலம்
திரு. மு. கோவிந்தசாமி B. O. L. (Hons) 206

36. சிந்தாமணியிற் சில திருத்தங்கள்
வித்துவான், மு. அருணாசலம் பிள்ளை 209, 310, 325

37. வேனிற்காதை இசைப்பகுதி விளக்கம்
சங்கீதம். ப. சுந்தரேசன் 214, 242, 345, 363

38. புறநானூற்றுப் பாடல்
வித்துவான். திரு. அடிகளாசிரியர் 221

39. மொழிவழி நாட்டமைப்பு
பொழிற்றொண்டர் 225

40. தமிழன் கண்டவை
திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் 229

41. சாரியை 'அன்' 'அக்கு'
பேராசிரியர் வே. வேங்கடராசுலு ரெட்டியார் 239

42. தமிழ் இலக்கியங்களில் உள்ள உவமச் சுவை
முதுபெரும்புலவர் அ. மு. சரவண முதலியார் 248, 272

43. பழமொழி
வித்துவான் க. வெள்ளைவாரணனர் 257

44. பாட்டுக்குள்ளே கதை
இரா. இளந்திரையன் B. A., (Hons) 264

45. கலித்தொகை
வித்துவான், மு. அருணுசலம் பிள்ளை 268

46. முதல் ஐந்திசைப் பண்கள்
சங்கீதம் ப. சுந்தரேசன் 279, 303

47. கடிசொல் லில்லைக்காலத்துப் படினே
திரு. சு. கு. அருணுசலனுர் 285, 290, 329

48. தமிழ் ஆட்சிமொழி
பொழிற்ருெண்டர் 289

49. பாரதியார்
புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் 297

50. திருப்பாச்சிலாச்சிராமம் கல்வெட்டு வரலாறு
வித்துவான் வை. சுந்தரேச வாண்டையார் 315, 340

51. நற்றிணையில் தாவரங்கள்
வித்துவான் சொ. சிங்காரவேலனுர் அவர்கள் 319, 336, 373

52. சென்னைப் பல்கலைக் கழக நூற்ருண்டு நிறைவு விழா
பொழிற்ருெண்டர் 321

53. கரந்தைத் தமிழ்ச் சங்க நிகழ்ச்சிகள்
பொழிற்ருெண்டர் 323

54. பேராசிரியர், திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கட்கு டாக்டர் பட்டம்
பொழிற்ருெண்டர் 324

55. மூலத் திராவிடமொழி
பேராசிரியர் வே. வேங்கடராசுலு ரெட்டியார் 350

56. பாராட்டற்குரியது
பேராசிரியர் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை, மதுரை 353

57. சகரக்கிளவி
பேராசிரியர், வே. வேங்கடராசுலு ரெட்டியார் 368

58. வாள் என்னும் தொழிற்பெயர்
வித்துவான், திரு. அடிகளாசிரியர் 370

59. கரந்தைப் புலவர் கல்லூரி நிகழ்ச்சிகள்
பொழிற்ருெண்டர் 377

# தமிழ்ப் பொழில்.

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

| துணர் | திருவள்ளுவர் யாண்டு ௲௯௱௮௰ | மலர் |
|---|---|---|
| ௩௨ | துன்முகி, சித்திரை, 1956 ஏப்ரல், மே. | க. |


## பொழிற்றொண்டர் கருத்துரைகள்.

செய்யுளுக்கும், உரைநடைக்கும் உள்ள வேறுபாட்டைப் போலவே எழுத்திற்கும் பேச்சிற்கும் வேறுபாடுண்டு. கடுமையும் திரிபும் பல பொருள்படும் புணர்ச்சியும் குறைத்துக்கொள்ளலா மாயினும், இலக்கண வரம்பையும் சான்றோர் மரபையும் விட்டுவிடுவ தென்பது மொழி வளர்ச்சிக்கிழுக்காகும். கன்னித் தமிழைக் கையாள்வோர் வரம்பு மீறினால் என்னாவதென்று கருதியே தொல் காப்பியர் முதல் ஆறுமுக நாவலர் வரை மரபாக இலக்கணத்தைப் போற்றியும் வலியுறுத்தியும் வந்துள்ளனர். அதனாற்றான் இரண்டா யிரம் ஆண்டுகட்கு முற்பட்ட நூலை இப்பொழுதும் தெளிவாக நாம் அறிகிறோம். யாழ்ப்பாணத் தமிழன் எழுதிய உரைநடையைச் சென்னைத் தமிழன் செம்மையாகப் புரிந்துகொள்ளுகிறான். அவ்வளவு காப்பு இலக்கணத்தில் அமைந்துள்ளது. இதைவிட்டு 'நீ வீட்டிற்குப்போய் வா' என்பதனை 'நீ ஊட்டுக்குப் பூட்டுவா' எனப் பேசுவது போன்றே எழுதினால் 'நீ உண்ணாமல் வாயைப் பூட்டிவை' என்ற பொருளைத் தானே தரும். சொல்லுவோனும் கேட்போனும் எதிரெதிர் இருப்பதாலும் காலம், இடம், கருத்து முதலிய சூழ்நிலை களாலும் எவ்வளவு கொச்சையாகப் பேசினாலும் புரிந்துகொள்ள வியலும். பேச்சு அழிந்து விடும். ஆனால் அதனை அப்படியே எழுதினால் அகராதி வைத்துக்கொண்டாலும் புரிந்துகொள்ள வியலாது. எனவே பேசுவதுபோன்றே எழுதுதல் பிழையாகும்.

திரு. சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் அவர்கள் அண்மையில் பெரியார் டி. கே. சி. அவர்களின் படத்திறப்பின்போது "கரடுமுரடான சொற்களை உபயோகிக்காமல் எல்லாருக்கும் புரிகிற

முறையில் எழுத வேண்டியது அவசியந்தான். ஆனால் தமிழ் மரபி லிருந்து பிசகாமல் இலக்கணப் பிழைகள் இல்லாத திருத்தமான நடையில் எழுத வேண்டும். அகத்திய முனிவர் வந்து இன்றைய தமிழைப் படித்தாலும் குற்றங் காணமுடியாத முறையில் இருக்க வேண்டும்'' (15-4-56 கல்கி) என்று கூறியுள்ள கருத்துக்களை எழுத்தாளர்கள் நினைவுகூர வேண்டுகிறோம்.

## சங்க நிகழ்ச்சிகள்.

21—3—56 சங்கச் சார்பில் திருவாளர், திருவாசகமணி, K. M. பாலசுப்பிரமணியம். பி. ஏ., பி. எல்., அவர்கள் தமிழ்ப்பெரு மன்றத்தில் "திருக்குறளும், ஐந்தாண்டுத் திட்டமும்'' என்ற தலைப்பில் இப்பொழுது இந்திய அரசியலார் வகுத்துள்ள திட்டங்கள் யாவும் வள்ளுவரால் தெளிவாக ஆனால் சுருக்கமாக 2000 ஆண்டு கட்கு முன்னரே சொல்லப்பட்டவற்றுள் சிலவே என்பதனை ஒரு சில குறள்கள்மூலம் அழகாக விளக்கி ஓர்சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். மேலத்தஞ்சை மாவட்ட நடுவர், (District Judge) திரு. J. அப்துர் இரகீம், பி. ஏ., பி. எல்., அவர்கள் தலைமையேற்றருளினார்கள்.

14—4—56 உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளி மாணவர் இலக்கிய மன்றம் 15-ஆம் ஆண்டு விழாச் சிறப்பாக நடந்தது. அது போது தஞ்சை, சரபோஜிக் கல்லூரி முதல்வர், திரு. Captain, T. முருகையன், எம். ஏ., அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

குடந்தை, அரசினர் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைமைப் பேராசிரியர், திரு. அ. கிருட்டினமூர்த்தி, எம்.ஏ. பி.எல்., எம்.ஓ.எல்., (ஹானர்ஸ்) அவர்கள், "மொழியும் உணர்வும்" என்ற தலைப்பில் சிறந்ததோர் சொற்பெருக்காற்றினார்கள். பள்ளி மாணவ, மாணவி களால் சிறந்த கலை நிகழ்ச்சிகளும், மாணவர்களால் "சிவமும் செந்தமிழும்'' என்னும் இலக்கிய நாடகமும் நிகழ்ந்தன. பள்ளித் தலைவர், திருவாளர், K. M. சுந்தரம், பி. ஏ., எல். டி., அவர்கள் நன்றி கூற விழா இனிது நிறைவேறியது.

பொழிற்றொண்டர்.

சென்ற இதழின் தொடர்ச்சி.

# கரந்தைக் கோவை.

[ வித்துவான், ச. பாலசுந்தரம். ]

## 15. வரைதல் வேட்கை.

### தலைவியைப் பாங்கி பருவரல் வினாதல்.

209 ஆலமுண் டோன்வரை விந்தமும் போய்த்தமிழ் அன்னையின்று
ஞாலமுண் டோன்வரை யும்மிழந் தாளென நைந்தனையோ?
மூலமுண் டோபிற நின்றுயர்க் கன்னை முனிந்தனளோ?
மேலுமுண் டோகரந் தைத்தமிழ் போற்கமழ் மெல்லியலே?

### தலைமகள் அருமறை செவிலி அறிந்தமை கூறல்.

210 செல்லா உணவுமென் கொள்ளா உறக்கமும் செப்புமொழி
ஒல்லா நிலையுமோர்ந் தன்னைக் கரந்தையைப் போலொளிரும்
நல்லாய்! உளத்திலென் நாடினை? என்றனள் நாக்குழற
எல்லா! மறைத்தொரு வில்லா விடையை யியம்பினனே.

### இதுவுமது.

பண்பட்ட செந்தமிழ்ப் பாநலம் பார்த்துப் பயில்கரந்தைத்
தண்பட்ட மேவிய சாரற் குறுகுந் தலைவரின்பால்
எண்பட்ட நெஞ்சொடும் யானிருக் கும்போ தெனைவளர்த்தாள்
கண்பட்ட தாலுளம் புண்பட்ட தேவுயிர்க் காரிகையே.

### தலைமகள் தலைவன் வருந்தொழிற் கருமை சாற்றல்.

211 தரையொடுங் காத தமிழ்சேர் கரந்தைத் தலைவர்வரின்
உரையொடுங் காத செவிலியும் ஊருமூர்க் காவலரும்
குரையொடுங் காத ஞமலியும் கூகையும் கோழியும்வான்
வரையொடுங் காத மதியும் பகைசெயும் வாணுதலே.

### தலைமகனூர்க்குச் செலவொருப்படுதல்.

212 அருந்தமிழ் வேலையில் ஆரமு துண்ணற் கறிஞர்புகழ்க்
கரந்தையின் பாலணை வாமெனச் சொல்வர் கமழ்குழலாய்!
மருந்தனை யார்மனம் போல்வலி கொள்ளுமோர் மாட்சியிலேம்
தெரிந்தனை வோமவர் சீர்பதி நந்துயர் தீர்வதற்கே.

---

209 ஆலமுண்டோன்—சிவபெருமான். வரை—இமயமலை. விந்தம்—விந்தியமலை. ஞாலமுண்டோன்—திருமால். வரை—திருப்பதி. பிறமூலமுண்டோ என மாறுக—துயர்வேறுமுண்டோ என்க. 210 ஒல்லாநிலை—பொருந்தாமை. ஓர்ந்து—ஆய்ந்து. எல்லா!—தோழியே. இல்லாவிடை — பொய்ம்மை. தண்பட்டம்—குளிரோடை. எண்பட்ட—சிந்தனையுடைய. கண்பட்டது—கண்டனள் என்றபடி. 211 தரையொடுங்காத—தரையின்கண்ணே பிறமொழிகள்போல மறையாத. உரை—இடித்துரை. ஞமலி—நாய். வான்வரை—ஆகாயத்திடத்து. 212 தமிழ்வேலை—தமிழாகிய கடல்.

### பாங்கி இறைவனைப் பழித்துரைத்தல்.

213 நெறிமர பாயவை நீங்ககி லாத்தமிழ் நேர்கரந்தைக்
குறிமர பானமைக் கூடிய கோனுளங் கொண்டதெலாம்
பொறிமர பாயின வோவுயி ரென்றுபு கன்றதுபொய்ச்
செறிமர பாயின தாடவர் யாவரும் தீயவரே.

### இறைவி இயற்பட மொழிதல்.

214 வளிநிலை வான்பரி ணுமம் ஒளியொலி மாட்சியெலாம்
தெளிவுடன் செப்புந் திறந்தமிழ்க் குண்டெனத் தேர்ந்திருந்தும்
இளிவரல் நம்மவ ராற்பெறக் கண்டனம் ஏர்கரந்தைக்
களிதமி ழார்மறந் தாரெனின் நம்வினை காரிகையே.

### கனவு நலிபுரைத்தல்.

215 மொழித்தேன் பிழிபவர் வாழ்கரந் தைப்பதி வள்ளலுடன்
சுழித்தே னிரவினிற் றூக்கமென் றோர்ந்திலன் றுண்ணெனவே
விழித்தே னியற்கையை வெஞ்சுடர் தன்னை வெறுத்திறையைப்
பழித்தேன் நினைவென வோர்நிலை யீண்டுப் படைத்ததற்கே.

### கவினழி புரைத்தல்.

216 பீடுறு செந்தமிழ்ப் பெட்பார் கரந்தையைப் பேணகிலார்
நாடொறு நூனய மாயகி லார்மதி நைவதென
வாடுறு மென்னெழில் மங்கைநல் லாயிந்த, மண்ணுலகிற்
கோடுறு தேன்மகிழ்ந் தாரதைச் சேற்றிடைக் கொட்டுவரே?

### தன்றுயர் தலைவற் குணர்த்தல் வேண்டல்.

217 ஒன்றே இறையென ஓதுந் தமிழ்நெறி யோர்கரந்தை
நின்றே பயின்றநெஞ் சத்தவர்க் கென்றன் நெடுந்துயரைச்
சென்றே உரைப்பவர் நன்றே பெறுதவென் தீவினையைக்
கொன்றே புகழ்பெறு வாரெனக் கும்முயிர் கூட்டுவரே.

---

*213 நெறி—இலக்கணம். மரபு—சான்றோர் வழக்கு. குறிமரபால்—குறியினிடத்து முறைமையாலே. பொறி மரபு—ஐம்பொறியால் நுகரும் இன்புச்செயல். செறிந்த பொய் என மாறுக. 214 வளி நிலை—காற்றின் இயக்கமும் செறிவும். ஒளி—வானிடத்துள்ள கோள்கள் கதிர்மதி முதலியன. ஒலி—கடலொலி இடி அநுகரண ஓசை முதலியனவும் எழுத்தொலி முதலியனவும். 215 சுழித்தல்—திளைத்தல் தூக்கமும் விழிப்புமாகிய இருநிலைமையுடைய இயற்கையையும் அதனை இயற்றும் கதிரவனையும் காரணமாகிய கடவுளையும் வெறுத்தேன் என்றாள் தூங்கிக்கொண்டேயிருந்தால் கனவு நிலை நீடிக்குமென்ற கருத்தால். 216 கோடுறு தேன்—கொம்புத்தேன். பிறபொருள்வைம்பணி. 217 சென்றுரைப்பவரைப் பெறுத தீவினையைக் கொல்லுதலாவது சென்றுரைப்பவரை நேரச் செய்தல் அதைச் செய்தார் புகழ் பெறுதலோடு தனக்கும் உயிரளித்தாராவர் என்று கூறினாள் தலைவி.*

### துன்புறு பாங்கி நீ சொல்லெனச் சொல்லல்.

218 தும்பியி டத்தினிற் றேனிருக் கும்மிடம் சொல்லுவரோ?
அம்பிய லும்விழி யாய்கரந் தைத்தமிழ் ஆளளர்போல்
வெம்பியி ருந்தெழில் வாடுமுன் மேனி மெலிவையெலாம்
நம்பிய கப்பொருள் தேறினர்க் கென்யான் நவிலுவதே.

### அலர்பார்த் துற்ற அச்சக் கிளவி.

219 வீயலர் நன்மணம் மேவுங் கரந்தை வியன்றமிழைத்
தோயலர் வாயுரை போற்றுயர் செய்யுமித் தோகையரின்
வாயலர் நாணுதும் வார்குழல்! முன்னம் மதன்சிலையில்
சாயலர் ஆற்றகில் லேனிவை வேறெனைச் சார்கின்றதே.

### ஆறுபார்த்துற்ற அச்சக் கிளவி

220 செல்லுறு காரெனச் செந்தமிழ்க் காவியம் செய்தகம்பன்
சொல்லுறு நற்கரந் தைமகிழ் தோன்றல் துணிந்துவரும்
கல்லுறு கான்வரைக் கைம்மலை தேடிக் கடும்புலியூர்
அல்லுறு புன்னெறிக் கேயுளம் போயின தாயிழையே.

### காமமிக்க கழிபடர் கிளவி.

221 சங்கந் திகழ்கரந் தைத்தமிழ் ஒப்பத் தருமமிழ்து
பொங்குங் கடற்கழி காற்பொழில் காளெழிற் புள்ளினங்காள்!
இங்குற் றழுவதென் னேயெனக் கேளலிர் என்னுயிரிற்
பங்குற் றவர்வரப் பார்த்துரை யீரென்ன பாவமிதே?

### தன்னுட் கையா றெய்திடு கிளவி.

222 உடல்வெளுத் தாயுறங் காயுண வுண்ணுய் உயர்குருகே!
மடல்விடு செந்தமிழ் மன்றல்மிக் கோங்க மகிழ்கரந்தைக்
கடல்வழி நோக்கிநின் றேங்குமென் போலும் கலந்தவரை
அடல்புரி யாணினத் தாற்றுயர் நீயும் அடைந்தனையே?

### நெறி விலக்குவித்தல்.

223 கணங்கொளுஞ் செந்தமிழ்க் காவலர் துன்னுங் கரந்தையின்பாற்
குணங்கொளும் நூலறி கோமகன் தன்னைக் குறுகியவர்
மணங்கொளும் நாளினல் லாலிருள் வாயரி மாவிலங்கின்
நிணங்கொளும் நீணெறி வாரலென் பார்க்கிசை நீடுமன்றே.

---

218 தும்பி—வண்டு. தலைவனே நின் துயர் அறிவான் நான் சொல்வது மிகை என்று தோழி கூறினள் என்பது கருத்து. 219 வீஅலர்-விரியும் மலர்கள் அலரும். தோயலர்—பொருந்ாதவர். வாயலர்—வாயாற் கூறும் பழிமொழி சிலையில் சாய்அலர்—வில்லிற் பொருந்தும் மலரம்புகள். 220 செல்—இடி. உறுதல்—பொருந்துதல். கைம்மலை—யானை. அல்—இருள். 221 கழிபடர்—மிக்க துன்பம். 222 மன்றல்—புகழ் மணம். அடல்புரிதல்—கொல்லுதல். 223 கணம்—குழு. அரிமா—சிங்கம். நிணம்—கொழுப்பு.

*குறிவிலக்குவித்தல்.*

224 நெறிவரு செந்தமிழ் நீடுங் கரந்தையை நேரணங்கே
கறிவளர் சாரல்நம் காவிடை முன்னங் கலந்துயரும்
குறிவரு வாரிடம் கூறுக அன்னையக் கொல்லையிலே
மறிதரு வாள்பகல் ஆரிருள் சேரலம் வாரலென்றே.

*வெறி விலக்குவித்தல்.*

225 தேடும் பொருள்களெ லாந்தருந் தெய்வத் தமிழினிசை
பாடும் கரந்தையைப் பற்றலர் போலுளம் பைங்கணுற
ஆடும் வெறியினை ஆய்ந்தனள் அன்னைநம் அண்ணலினாற்
கூடும் பசப்பைய ணங்கணங் கிற்றெனக் கொண்டனளே.

*பிறர் வரைவு விலக்குவித்தல்.*

226 பெற்றோர் அறிகிலர் என்மனம் நன்மணம் பேசிமனை
உற்றோர்க் குரைவிடுத் தாலுடன் யானும் உயிர்விடுவேன்
மற்றோர் பிறப்பினி லேயெனை முன்னம் மணந்துகொளக்
கற்றோர் மகிழ்கரந் தைவரை யாரிடம் கண்டுசொல்லே!

*குரவரை வரைவெதிர் கொள்ளுவித்தல்,*

227 பார்கொண்ட வாழ்வினைப் பாடுந் தமிழ்வளர் பைங்கரந்தை
ஊர்கொண்ட வேலவர் உற்றா ருடன்களி றூர்ந்துமணச்
சீர்கொண்ட ணைந்திடிற் செந்திரு வேநமைச் சேர்ந்தவர்கள்
கார்கண்ட தோகையைப் போலெதிர் ஏற்றுக் களிகொள்வரே.

## 16. வரைவு கடாதல்.

*வினவிய செவிலிக்கு மறைத்தமை விளம்பல்.*

228 ஈரைந் தொலியிரு நான்கிடம் மேவி எழுந்தமிழின்
சீரைந் துரைப்பவர் சேர்கரந் தைப்பதி செம்மல்! விழி
நீருந்து கண்ணியைக் கண்டவெந் தாயெனை நேர்வினவ.
ஊருந் திரையவள் வண்டல் அழித்ததென் றோதினனே.

*அலரறிவுறுத்தல்.*

229 காவுற் றெழுந்தநுங் காதல் முகையைக் களவெனுமோர்
நாவற்ற வண்டலர்த் தாநிற்ப விந்நகர் நங்கையர்வாய்
மேவுற் றலர்ந்தத னாற்கரந் தைப்பயில் வேளனையாய்!
நோவுற் றினைந்தனள் பாவைஎன் னேயினி நோற்பதுவே?

---

224 கறிவளர் கானம் - மிளகுக்கொடி படரும் மலைச்சாரல். குறி—பகற்குறி இரவுக்குறி. மறிதருதல்—வந்துவந்துபோதல். சேரலம்—வரமாட்டோம். 225 பைங்கண்—துன்பம். வெறி—வேலனாடும் வெறியாடல். அணங்கு—சூர்மகள். 226 உரைவிடுத்தல்—மண உறுதி கூறுதல். 227 உலகில் வாழ்வதெப்படி என்ற அறநெறியை விரித்துக்கூறும் தமிழ் என்றபடி. 228 ஐ-ஔ—கூட்டொலியாதலின் உயிரொலிபத்தென்றபடி. இடப் பிறப்பும் முயற்சிப் பிறப்பும் ஆயஎட்டு. எழுத்து, சொல், பொருள், யாப்பு அணி என்ற ஐந்திலக்கணம். வண்டல்—ஓர் மகளிர் விளையாட்டு. 229 கா—சோலை. நோற்பது—மணநாளை எதிர்பார்த் தடங்கியிருத்தல்.

### தாயறிவுறுத்தல்.

230 ஒலியும் வடிவும் உருமாறினும்வேர் உறுபொருளால்
மலியும் தமிழ்ச்சொலிஃ தாரிய மன்றென மாண்கரந்தைப்
பொலியும் புலவோ ரறிவராங் கன்னை நம் பூங்கொடியாள்
மெலியும் உருமறை யின்விளை வென்று வெதும்பினளே.

### வெறியச் சுறுத்தல்.

231 உள்ளத் தெளிவுரைக் குந்தமிழ் நூல்கள் உணர்வுடையோர்
கொள்ளத் தருங்கரந் தையெங் குரிசினீ கொண்டநலம்
எள்ளத் தனையறி யாளணங் கிற்றென எண்ணிமறி
துள்ளத் துணிக்கும் வெறியாட லன்னை தொடங்கினளே.

### பிறர்வரை வுரைத்தல்.

232 எண்மை உணர்வழ காழும் இசையோ டியன்றுசுவைத்
தண்மை தருந்தமிழ் சேர்கரந் தைமலர்த் தாருடையோய்!
பெண்மை மிளிருமென் பேதைக் குருகினர் பேசுமணம்
உண்மை தெரிந்திடின் உண்டாம் விளைவையும் உன்னுகவே.

### வரைவெதிர் வுரைத்தல்.

233 குழைத்தமு தூட்டிய குன்றை முனித்தமிழ் கொள்கரந்தைத்
தழைத்தரு ளோங்கிய சான்றவர் முன்வரத் தானுமொளி
இழைத்தெழில் மேவுமென் நங்கைநல் லாள்மணம் ஏற்கவரின்
மழைத்துளி கண்டசகோரமொப் பார்மலை வாணர்களே.

### வரையுநாளுணர்த்தல்.

234 கார்கொண்ட காவினிற் கள்வாய் மலர்ந்து கணியுரைக்க
ஊர்கொண்ட திங்களும் ஓதிடு மாலினி ஒண்கரந்தைச்
சீர்கொண்ட செந்தமிழ் தேர்ந்தாய்! மணங்கொளும்செவ்வியினை
யார்கண்டு ரைப்பவர் நானிலத் தேபிற நாளுமுண்டே?

### பாங்கி தலைமகளறிவறிவுறுத்தல்.

235 அருங்குணத் தாற்புகழ் வேண்டா கணபதி ஆற்றியதொண்
டொருங்கெழு சீர்கரந் தைத்தமிழ் ஓதிய ஒண்மையினல்
மருங்கெழு தோழியர் போலெனக் குந்தன் மனத்துயரைப்
பெருங்குணத் தோய்!மறைத் தாளவள் பெற்றியென்பேசுவனே?

---

*230 சில தமிழ்ச் சொற்கள் வடமொழிபோன்றிசைப்பினும் அடியையும் பொருளையும் ஆய்ந்தால் தமிழே என்பதுறுதியாம் என்பது முன்னிரண்டடிகளின் கருத்து. மறை—களவு. 231 குரிசில்—தலைவன். மறி—ஆடு. 232 உருகினர்—அழகில் மயங்கினர். மணம் பேசும் உண்மை என மாறுக. உன்னுக—எண்ணிப்பார். 233 குன்றைமுனி—சேக்கிழார்-தமிழ் பெரிய புராணம். சகோரம்—மழையை விரும்பி வான்பார்த்திருக்கும் ஒரு பறவை இனம். 234 கள்-தேன்—கணிவேங்கை. ஊர்கொண்ட திங்கள்-பரிவேடமமைந்தமதி. (சோதிடன் கூற ஊரார் ஒத்துக்கொண்ட மாதம் என்பது வேறு பொருள்.) வேங்கை மலர்தல் திங்கள் பரிவேடஞ் சூழ்தல் ஆய நாளில் மலை வாணர் மணம் முடித்தல் பண்டை வழக்கு.*

### குறிபெயர்த்திடுதல்.

236 புயல்சேர் பொழிலிடைப் பூவைக் கணிந்தநின் பூத்தொடையை
அயில்சேர் மொழியன்னை கண்டுமுன் னையம் அடைந்தனள்நீர்
குயில்சேர் குறியிடம் கூடுதல் நீங்குக! கோவையுறப்
பயில்வார்க் கருள்தரு பைங்கரந் தைத்தமிழ்ப் பாவலனே!

### பகல் வருவானை இரவு வருகென்றல்.

237 இருள்கெடுப் பான்மதி வான்புகுந் திப்புவி; ஏந்திழையாள்
மருள்கெடுப் போன்மலர்க் கான்புகுந் தையநீ; வன்மனத்துச்
சுருள்விரிப் பான்வளர் சங்கக் கரந்தையின் தூய்தமிழ்ப்போல்
அருள்!சிரித் தல்லிய ழைத்திடும் போதுவந் தாண்டகையே.

### இரவு வருவானைப் பகல் வருகென்றல்.

238 உரையோ டிலக்கணத் துண்மை பரப்பும் உயர்ந்தபரம்
பரையோ டிலங்குநற் பண்பார் கரந்தையிற் பாவலனே
மரையோ டெமது மனைக்கத வைமதி யும்மனையும்
நிரையோ டடைப்பர்நீ ரெங்ஙனம் நேர்வதந் நீளிரவே.

### பகலினும் இரவினும் பயின்று வருகென்றல்.

239 நடையூறு செந்தமிழ் நாவீறு கொண்டவர் நற்றமிழ்நூற்
புடையூறு பூங்கரந் தைப்பதி யாய்வரப் போதிரண்டும்
இடையூறு செய்யும தாலினி வாரலை ஏற்றவர்க்குக்
கொடையூறு கையுடை யாய்!குலத் தாரொடுங் கூடுகவே.

### உரவோனுடும் ஊருங்குலனும் மரபும் புகழும் வாய்மையுங் கூறல்

240 புலந்திகழ் நூற்றுறை போற்றுநல் லோர்கள் புகழ்கரந்தைத்
தலந்திகழ் நாடுமுன் னூருங் குலனும் உயர்மரபும்
நிலந்திகழ்சீர்த்தியும் வாய்மையும் மாசு நிகழ்வதற்கோ
பொலந்திகழ் மார்பஇப் பொல்லா ஒழுங்கினைப் பூண்டதுவே.

### ஆறுபார்த்துற்ற அச்சங் கூறல்.

241 முழுதறங் காத்தமூ வேந்தர் வளர்க்க முகிழ்த்ததமிழ்
விழுதிறங் குங்கரந் தைக்கவி போன்றவள் விம்முமனம்
கழுதுறங் கும்மிருட் காதலி னல்வருங் கானெறியின்
பழுதுணர்ந் துன்னடி தாங்குதற் கேவரும் பார்த்திபனே.

---

235 புகழை விரும்பாத அரிய குணத்தை உடைய கணபதி. பெற்றி—தன்மை. 236 புயல்—கார்மேகம். பூவை—தலைவி. கோவையுற—நெறிமுறையாக. 237 மதிகண்டு மலரும் அல்லியைச் சிரித்து வரவேற்குமென்றது நயம். 238 மரை—தாமரை. மதியும் அன்னையும் முறையே தாமரை மலரையும் வீட்டையும் அடைத்தலினல் இரவில் வரவியலாதென்றார். 239 போதிரண்டு–பகல் இரவு 230 புலம்—அறிவு. 241 அறம்முழுதும் எனமாறுக. விழுதிறங்குதல்—தாங்குதல். கழுது—பேய். பழுது—நெறியின் தீங்கு. 242 உருக்கும்—மெலிவிக்கும். (தொடரும்.)

# எல்லாராய்ச்சியும் சொல்லாராய்ச்சியா?

ஞா. தேவநேயன்
நகராண்மைக் கலைக் கல்லூரி, சேலம்.

மக்கள் அறிவடையும் வழிகள், கல்வி, கேள்வி, ஆராய்ச்சி, துய்ப்பு என நால் வகைப்படும். ஒருவர் பிறர் எழுதி வைத்ததைத் தாமாய்க் கற்றறிவது கல்வி; அங்ஙனமன்றி அறிஞரை யடுத்துத் தமக்கு வேண்டியவற்றைக் கேட்டறிவது கேள்வி; இவ்விரண்டுமன்றி, ஒன்றைப் புதுவதாகத் துருவியாய்ந்தறிவது ஆராய்ச்சி; இனி, வாழ்நாளில் பற்பல வகையில் தாமே துய்த்து அறிவது துய்ப்பு (அனுபவம்). இவற்றில் கல்வி என்பது இக் காலத்தில் கேள்வியையுந் தழுவும்.

ஆராய்ச்சி ஆராயப்பெறும் பொருள் நோக்கிப் பலதிறப் படும். அவற்றுள் சொல்லாராய்ச்சியும் ஒன்று. அது மொழி யாராய்ச்சியுட்பட்டது. ஒரு மொழிக்குட்பட்ட சொல்லின் அல்லது சொற்களின் வரலாற்றை ஆய்வது சொல்லாராய்ச்சி; ஒரு மொழிக்குப் பிற மொழியோடு அல்லது மொழிகளோடு உள்ள தொடர்பை ஆய்வது மொழியாராய்ச்சி. மொழிகளெல்லாம் பெரும்பாலும், சிலவும் பலவுமாய்த் தம்முட் டொடர்பு கொண்டிருப்பதால், மொழியாராய்ச்சி யில்லாதார் செய்யும் சொல்லாராய்ச்சி கட்டுப்படுவதே.

சொல்லாராய்ச்சி செய்ய விரும்பும் ஒருவர், முதற்கண், ஏதேனுமொரு மேலை மொழியில், சிறப்பாக ஆங்கிலத்தில், உள்ள மொழி நூல்களையும் சொல்லாராய்ச்சி நூல்களையும் சொல்லியலகராதிகளையும் கற்றல் வேண்டும். அங்ஙனம் கற்கும் போதே, மொழியொலியில் (Phonology), சொல் வடிவியல் (Morphology), பொருட் பாட்டியல் (semasiology) முதலிய மொழி நூற்றுறைகளைச் செவ்வன் உணர்ந்துகொள்ளுதல் வேண்டும். அதன்பின், சொல்லாராய்ச்சி செய்ய விரும்பும் மொழியின் இலக்கணத்தைக் கற்பதுடன், அதிலுள்ள சொற் குடும்பங்களையெல்லாம் தனித் தனியாகவும் தொகுதி தொகுதியாகவும் நோக்கி, அவற்றின் தொடர்புகளை அறிந்துகொள்ளுதல் வேண்டும். பின்னர், அம்மொழிச் சொற்களை அம்மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த பிற மொழிச் சொற்களோடும் அக்குடும்பத்தையடுத்த அயற் குடும்ப மொழிச் சொற்களோடும் ஒப்பு நோக்கிக் காண்டல் வேண்டும். சொல்லாராய்ச்சிக்குச் சொல் வரிசைகளை ஒப்பு நோக்குவதினும், இலக்கண நெறி முறைகளை ஒப்பு நோக்குவதே மிகுதியும் வேண்டப்பெறுவதாம்.

மொழி நூல் அல்லது சொல்லியல் நூல், கணிதம்போலத் தற்சார்புக் கலையன்று. அதற்குப் பிறகலையறிவும் இன்றியமையாது வேண்டப்பெறும். உளநூல் (Psychology), வரலாற்று நூல் (History), ஞாலநூல் (Geography), மாந்தனூல் (Anthropology), என்பன மொழி நூற்குப் பெரிதுந் துணை செய்யும். வணிகம்பற்றி ஒரு மொழியினின்று இன்னொரு மொழிக்குச் சென்று வழங்குஞ் சொற்கட்கெல்லாம் வரலாற்றறிவும் ஞால நூலறிவும் இன்றியமையாதன.

எ.டு: துகி (தோகை), teak (தேக்கு).

மேற்கூறியவாறு கருவி நூல்களுங் கலைகளும் கைவரப் பெற்றபின், எல்லா மொழிகட்கும் பொதுவான சொல்லியல் நெறி முறைகளையும், ஆராய்வான் எடுத்துக்கொண்ட ஒரு மொழிக்கேயுரிய சொல்லாக்க நெறி முறைகளையும் அறிந்து கொள்ளல் வேண்டும். "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தன"வாயினும் "பல சொற்கு, "மொழிப் பொருட் காரணம் விழிப்பத்தோன்றா". ஆதலின், அவை இடுகுறியெனக் கொள்ளுதல் கூடாது. சற்று ஆழ்ந்து நோக்கின், அவற்றின் வேர்ப்பொருள் மெல்ல மெல்ல மிளிர்ந்து தோன்றும். சில சொற்கள் காலக்கடப்பில் மிகமிகத் திரிந்தும் இனச் சொற்களை இழந்தும் வேர்ச் சொல் வழக்கற்றும் போனதினால், அவற்றின் வேர்ப்பொருள் எத்துணை ஆழ்ந்து நோக்கினும் தோன்றுவதில்லை. அவற்றுள் ஒரு சிலவற்றிற்கு, அயன் மொழியிலுள்ள இனச் சொற்கள் வேர் காட்டினுங் காட்டும்.

சுடலை, கொடுக்கு முதலிய பல சொற்களின் வேர்ப் பொருள் நோக்கிய மட்டில் தோன்றும். மரம், பொன் முதலிய சொற்களின் வேர்ப் பொருள் ஆழ்ந்து நோக்கினாலன்றித் தோன்றா. தமிழ், கருவி முதலிய சில சொற்களின் வேர்ப் பொருள் ஆழ்ந்து நோக்கினும் தோன்றுவதில்லை. பொருந்தப் புகலலாக ஒரு சொற்கு பொருட் காரணங் காட்டுவது பொருந்தாது. ஒரு சொற்குக் காட்டும் வேர் எல்லாத் தடைகட்கும் விடையமையுமாறு. உலகத்தோடும், கலைகளோடும் மலையா திருத்தல் வேண்டும். அம்பு (வளைவல்) என்னும் சொல்லின் வேர்ப் பொருள், amphi (around) என்னும் கிரேக்கச் சொல்லால் அறியப்படுகின்றது. தமிழுக்கும் கிரேக்க மொழிக்கும் உள்ள தொடர்பு, என் 'Origin of Culture' என்னும் ஆங்கில நூலில் விளக்கப்பெற்றுள்ளது. ஆண்டுக் காண்க.

ஒரு சொல்லின் பொருட் காரணங் காணுதற்கு, முதற் கண், அச் சொல்லின் திருந்திய வடிவைக் கண்டுகொள்ளல்

வேண்டும். மணத்தக்காளி என்பதன் திருந்திய வடிவு மணித் தக்காளி என்பது. தக்காளி இனத்திற் சிறியது என்பது அதன் பொருள். மணி என்பது ஒரு குறுமைப் பொருள் முன்னொட்டு. மணத்தக்காளி என்னும் தவற்று வடிவிற்கு, மணமுள்ள தக்காளி என்றுதான் பொருள்கூற முடியும். இங்ஙனமே சென்னைப் பல்கலைக் கழக அகராதியிற் கூறப்பட்டுள்ளது.

ஒரு சொல்லின் திருந்திய வடிவைக் கண்டபின், அச்சொல் லாற் குறிக்கப்படும் பொருளின் சிறப்பியல்பை நோக்கவேண்டும். ஒரு பொருளின் சிறப்பியல்பு, அப்பொருள் முழுமையுந் தழுவியதாகவோ அதன் ஒரு மருங்கு பற்றியதாகவோ இருக்கலாம். பரிதி (வட்டமானது) என்பது முழுதுந் தழுவியது. வாழை (வழவழப்பானது) என்பது ஒரு மருங்கு (அடிமரம்) பற்றியது. வாழையினுஞ் சிறப்பாகத் தொடர்ந்து வாழ்வது மூங்கிலாதலால், வாழ்வது வாழை என்பது பொருந்தாது.

பல குணங்கள் பல பொருட்கும் பொதுவாயிருத்தலின், சிறப்பியல் பென்றது, பெரும்பாலும் ஒரு சார் பொருள்கட்குச் சிறப்பாயிருப்பதே. எ. டு :- வள்ளம், வள்ளி, வளை, வளையம், வளையல், வண்டு, வண்டி, வணர், வணக்கம், வட்டு, வட்டி, வட்டில், வட்டை. இவையெல்லாம் வளைந்தது அல்லது வளைய மாயிருப்பது என்னும் பொருள் கொண்டவையே.

குணம் என்பது தொழிலையும் தழுவும். எ. டு: கேழல் (நிலத்தைக் கிளைப்பது). ஒப்புமையும் ஒரு குணமே. எ. டு: நுணு (நுணல் போலுங்காயையுடையது).

ஒரு சொல்லான் பல கருத்துக்கள் எழுப்பப் பெறலாம். அவற்றின் முன்மை பின்மைத் தொடர்பு அறியப்பட்ட பின்னரே, மொழிப் பொருட் காரணம் துணியப் பெறல்வேண்டும். சிலவிடத்துப் பல காரணங்கள் ஒத்த பொருத்தமுடையனவாகத் தோன்றும். அவற்றுள் மிகப் பொருத்தமானதை ஏரண முறையிலும் ஒப்பு நோக்கியுமே துணிதல் கூடும். எ. டு: விழா என்னுஞ் சொற்கு, விழுத்தல், விழைதல் என்னும் இரண்டும் பொருட் காரணமாகத் தோன்றலாம். விழுத்தல் சிறத்தல். விழைதல் விரும்புதல். விரும்பிச் செய்வது என்னுங் காரணத் தினும், சிறப்புச் செய்வது என்னுங் காரணமே பொருத்தமாம். "சிறப்பொடு பூசனை" என்று வள்ளுவர் கூறியிருப்பதாலும் 'சிறப்புச் செய்தல்' என்னும் வழக்குண்மையாலும், பின்னதன் மிகுபொருத்தம் அறியப்படும். விழு — விழா. வேள்வியே விரும்பிச் செய்யப்படுவது. வேள்வியொடு செய்யப்படும் விழாக்கள், ஆகுபெயர் முறையில் வேள்வியெனப்பெறும்.

இனி, சொற்றிரிவு முறைகளையும் முற்பட அறிந்துகொள்ளல் வேண்டும். எ. டு: இரு குறில் ஒரு நெடிலாகத் திரியும் என்னும் திரிவு முறையால், அகல்—ஆல் (விழுதூன்றிப் படரும் ஆலமரம்), வணங்கு—வாங்கு முதலியனவும்; டகரம் ரகரமாகத் திரியும் என்னும் திரிவு முறையால், படவர்-பரவர், விடிச்சி-விரிச்சி (மறை பொருளை வெளிப்படுத்தலான பாக்கத்து விரிச்சி) முதலியனவும்; ழகரம் டகரமாகத் திரியும் என்னும் திரிவு முறையால், புழல்—புடல் (புழலை—புடலை), குழல்—குடல் முதலியனவும்; 'இல்' ஈறு ஒரு குறுமைப் பொருட்பின்னொட்டு என்பதால், தொட்டி—தொட்டில்: குடி—குடில் முதலியனவும்; 'அம்' ஈறு ஒரு பெருமைப் பொருட்பின்னொட்டு என்பதால், மதி—மதியம் (முழுமதி), நிலை—நிலையம் முதலியனவும்; உகரம் அகரமாகத் திரியும் திரிவு முறையால், குடும்பு—கடும்பு, நுரை—நரை (வெண்மை) முதலியனவும்; உகர ஊகாரம் முறையே இகர ஈகாரமாகத் திரியும் திரிவு முறையால், புரண்டை—பிரண்டை, தூண்டு—தீண்டு முதலியனவும்; விளங்குதல் காண்க.

செந்தமிழ்ச் சொல்லியல் நெறி முறைகளும் (Principles of Etymology) சொற்றிரிவு முறைகளும் (Modes of Derivation) எத்துணையோ பல. அவையும் அவற்றின் வகைகளும் எனது 'சொல்லாக்க நெறிமுறைகள்' என்னும் நூலிற் கூறப்பெறும்.

சொல்லாராய்ச்சி செய்வார் மேற்கூறியவாறெல்லாங் கற்றிருப்பதுடன், இறைவனால் இதற்கென அழைப்பும் (call) பெற்றிருத்தல் வேண்டும். அல்லாக்கால் உழைப்பெல்லாம் விழலுக்கிறைத்த நீராய்விடும். தமிழ்ச் சொல்லாராய்ச்சித் துறையில் தலைமையான அழைப்புப் பெற்றவர் **கால்டு வெல்** கண்காணியாராவர்.

இக்காலத்திற் சிலர், மொழியாராய்ச்சி செய்யாதும் மொழியாராய்ச்சிக்கும் சொல்லாராய்ச்சிக்கும் வேறுபாடு தெரியாதும், சொல்லியல் நெறி முறைகளையும், சொற்றிரிவு முறைகளையும் அறியாதும், தாம் தலைமைப் பதவி பெற்றிருப்பது காரணமாகத் தருக்கி, எல்லாம் வல்ல சித்தரும் அனைத்து நூலுங்கற்ற அறிஞரும்போல் நடித்து, பொய்யும் வழுவும் மலியச் சில சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள் வரைந்திருப்பதுடன், கால்டுவெல் ஐயர் காட்டிய வழி நின்று உண்மையாக ஆராய்ச்சி செய்த பிறரை, நெறிப்பட ஆராயாதவர் என்று குறிப்பாகவும் வெளிப்படையாகவும் கூறியும் வருகின்றனர். எளிய சொற்கட்கு எவரும்

வேர்ச்சொல் காட்டுவர். அரிய சொற்கட்குக் காட்டுவதே அரிது. சொல்லியல் நெறிமுறைகளை அறியாதார் கூறும் போலிச் சொல்லியல், பின்வருமாறு எழுதிறப்படும்.

(1) **ஒலிமுறைச் சொல்லியல்** (Sound Etymology)

எ. டு :- பாராளுமன்று— Parliament. பாராளுமன்று என்பது பார் ஆளும் மன்று என்னும் முச்சொற்றொடர் Parliament என்பது parler (speak) என்னும் பிரெஞ்சுச் சொல்லும் ment என்னும் ஆங்கில விகுதியும் சேர்ந்த ஒரே சொல்.

(2) **உன்னிப்புச் சொல்லியல்** (Guessing Etymology)

எ. டு :- அணில் = அழகு (அழகிய வரிகள்) உடையது.
அணி = அழகு கலம் = கல்லாற் செய்யப்பட்டது, வேந்தன் = வெம்மையாய். அதிகாரஞ் செலுத்துபவன். வேம் = வேந்தன்.

(3) **அறிவாகுலச் சொல்லியல்** (Pedantic Etymology)

எ. டு :- கிளி = கிளப்பது (பேசும் பறவை)
மண் = மணப்பது (நாற்றமுடையது)

(4) **அடிப்பட்ட சொல்லியல்** (Popular Etymology)

எ. டு :- நூல் (புத்தகம்) = இழைநூலும் எற்று நூலும் போல்வது.

(5) **குறிக்கோட் சொல்லியல்** (Tendentious Etymology.)

எ. டு:- ஐயன் < ஆரியன் (ஆர்ய)
அச்சன் < அஜ்ஜ (பிராகிருதம்) < ஆர்ய
வெறுக்கை (செல்வம்) = வெறுக்கப்படுவது.

(6) **வழூஉப் பகுப்புச் சொல்லியல்** (Malanalytic Etymelogy)

எ. டு :- சாப்பாடு=சாவதற்கு ஏதுவானது (சா + பாடு)

(7) **நகையாட்டுச் சொல்லியல்** (Playful Etymology)

எ. டு:- தோசை = இருமுறை 'சை' என்று ஒலிப்பது
தோ (உருது) = இரண்டு.

இங்கு காட்டப்பட்டுள்ள எடுத்துக்காட்டுக்களையெல்லாம் மறுக்கவும், விளக்கவும் புகின் விரியுமாதலின் அவற்றுள் நான்கை மட்டும் ஈண்டாராய்ச்சிக்கெடுத்துக்கொள்வல்,

(1) **அணில்.** அணி = வரி, வரிசை.
அணி— அணில் = முதுகில் மூவரிகளையுடையது.

(2) **வேந்தன் :** வேய்தல் = மேலணிதல், முடிசூடுதல். வேய் = வேய்ந்தோன் — வேந்தன் = முடியணியும் உரிமையுள்ள சேர, சோழ, பாண்டியருள் ஒருவன். வேள், மன்னன், கோ, வேந்தன் என்னும் நால்வகையரசர் பெயருள், வேந்தன் என்பது முடியணியும் உரிமையுள்ள மூவேந்தர்க்கே பொதுவாக வுரியதாம். இவ்வுரிமை கிறித்துவுக்கு முற்பட்ட காலமெல்லாம் கையாளப்பெற்று வந்தது.

கொன்றை வேந்தன் (சிவன்) என்பது கொன்றை வேய்ந்தோன் என்றே பொருள் படுதல் காண்க.

வேந்து என்னும் பாலீறில்லாப் பழவடிவமும் வேந்தன் என்று பொருள்படுவதே; செய்து என்னும் வாய்பாட்டு வினைமுற்றும் ஆதல் போன்று.

(3) **கிளி கிள்ளை :-** கிள்—கிள்ளி—கிளி, கிள்—கிள்ளை. கிள்ளுதல் = கூறிய மூக்கால் கொத்துதல். மரங்களிலுள்ள காய் கனிகளைக் கிள்ளி வைப்பது கிளியின் இயல்பு. பழகாத கிளியை ஒருவன் பிடிப்பானாயின், உடனே அகப்பட்ட உறுப்பைக் காயப்பட வலிதாய்க் கொத்திவிடும். 'கிளி கொத்தின பழம்' என்பது வழக்கு. பேசும் இயல்பு கிளிக்கில்லை. சொல்லிக் கொடுத்ததைச் சொல்லும் இயல்பே அதற்குண்டு. "சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை" என்பது பழமொழி. சொன்னதைச் சொல்லும் திறத்தில், கிளியினுஞ் சிறந்தது பூவையென அறிக,

(4) **அச்சன்.** அத்தன்—அச்சன் (ஆண்பால்) = தந்தை. அத்தி—அச்சி (பெண்பால்) = தாய், அக்கை.

இவை தூய தமிழ்ச் சொற்கள். த—ச : போலி.

ஒப்பு நோக்க : பித்தன் — பிச்சன்.

அத்தன், அச்சன் என்பன முறைப் பெயர்.

ஆரியன் என்பது ஒரு மக்களினப் பெயர்; அஃதுடன் ஓர் ஆரியச் சொல்.

அத்தன், அச்சன் என்பனவும்; அத்தி, அச்சி, என்பனவும்; முறையே ஆண்பாலீறாகவும் பெண்பாலீறாகவும் எண்ணிறந்த தமிழ்ப் பெயர்களில் தொன்றுதொட்டு வழங்கி வருகின்றன.

எ. கு :- தட்டாத்தி, வண்ணாத்தி } பெ. பா.
கிள்ளிச்சி, வேட்டுவச்சி }

அரசன் என்னும்சொல்லே, வடநாட்டில் அஜ்ஜ என்னும் பிராகிருதச் சொல்லாக வழங்கி வருகின்றதென்க.

(1) பல மொழிகள் தம்முள் தொடர்பு கொண்டிருப்பதால் சொல்லாராய்ச்சிக்கு மொழியாராய்ச்சியும் வேண்டும்;

(2) சொற்கள் குடும்பம் குடும்பமாய் இயல்வதால், அவற்றைத் தொகுத்து நோக்கியே மூலங்காணுதல் வேண்டும்; என்னும் இரு நெறி முறைகளையுணர்த்துதற்கு, ஒரு சொற்குடும்பத்தினை ஈண்டெடுத்துக் காட்டுவாம்.

**மேலையாரிய மொழிகளிலுள்ள தமிழ்ச் சொற்களுள் ஒரு சில:**

குலவு — L. *Curvo*, to bend; E. *Curve*.

குரங்கு (வளைவு கொக்கி) குறங்கு (கொக்கி) D. *Kring*, *Krink*, a Curl, bend, crook.

E. *Crank*, to bend, wind, and turn.

E. *Cringe* A. S. *Cringan*, *Crincan*, to bend with servility.

கறங்கு (வளைவு, வட்டம், காற்றாடி, சுழல்)— A. S. *hring* O. H. G. *hing*, Icel. *hringr*, G. *ring*, D. *ring*, sw. *ring*, E. *ring*.

sw. *Kring*, about, around; Icel, Kringer, a circle, Prov G. *Krink*, Kring, a ring, circle.

குரவை—Gr. *choros*, a dance in a ring, L. chorus, E. Chorus

குருள்— D. *Krullen*, Dan *Krolle*, E. *Crull*, *Curl*,

குருகு — A. S *Cran*, D. Kraan, G. Krahu, Kranich; Icel. *trans*, Dan. *trane*. Armor. *karan*, W. Garan, Gr. *Geranos*, L. *Grus*, E *Crane*.

கொக்கி — A. S. *hoc*, E. *hook*, D. *hock*, Icel. *haki*, G. *haken*, O. H. G. *hako*, L. G. hake.

கொடுக்கு — Icel. *Crokr*, sw. *krok*, Don *Crog*, O. E. *Crok*, E. Croog, Dan *Crog*, D. *Kruk*, W. Crwg, Gael. *Crocan*. O. F. *Croc*. ட. ர. போலி ஒப்பு நோக்க: குடகு—Coorg, அடைக்காய்—areca.

கோணம் — Gr. *Gonia*, an angle.

கோட்டை — L. Castrum. E. Caster.

மேற்காட்டிய தென் சொற்களும், மேலையாரியச் சொற்களும், சொல்லளவில் மட்டுமன்றி அடிப் பகுதியிலும் ஒலியும் பொருளும் ஒத்திருப்பதைக் காணலாம். அவற்றுள் மூலம் எவை, திரிபு எவை என்று கண்டுபிடித்ததற்கு, அச்சொற்களெல்லாம் எம்மொழியில் ஒருங்கே வழிமுறைத் தொடர்புற்ற ஒரு குடும்பமாக வழங்கி வருகின்றன என்று காணுதல் வேண்டும். அவை எம்மொழியில் எங்ஙனம் வழங்கி வருகின்றனவோ அம்மொழியே அவற்றுக்கெல்லாம் மூலம் என்பது முடிந்த முடிபாகும். பல இடங்களில் ஒரு மரத்தின் இலையும் பூவும். காயும் கனியுமாகிய சினைகளே சிதறிக் கிடக்குமாயின், அவை அண்மையிலோ, சேய்மையிலோ உள்ள ஒரு மரத்தினின்றே பறிக்கப்பட்டிருத்தல் வேண்டும். இதற்கு மாறாக, அச்சினைகளிலிருந்தே அம்மரம் வந்ததென்று வலிப்பது உத்திக்கும் உண்மைக்கும் பொருந்தாத இடும்புக் கூற்றாகும் ஓர் ஊரிலுள்ள மக்கள் வேற்றார் சென்று வாழின், தொன்று தொட்டு அவ்வூராரே எனத் தம்மைச் சொல்லிக்கொள்ள முடியாது. அங்-ஙனம் சொல்லுதற்குத் தொன்றுதொட்டுவரும் உறையுள் உறவு, நட்பு, அயல் முதலியவற்றைக் காட்டுதல் வேண்டும். மேற்காட்டிய ஆரியச் சொற்கள் மேலை மொழிகளில் ஆங்காங்கு ஒன்றிரண்டாகச் சிதறிக் கிடப்பனவேயன்றி, தமிழிற்போல் மரபுத் தொடர்புற்ற ஒரு குடும்பமாக அல்லது குலமாக வழங்கி வருவனவல்ல. ஆரிய மொழிகளில் நூற்றுக்கணக்கான அடிப்படைச் சொற்கள் சொல்லாலும், பொருளாலும் தென் சொற்களை ஒத்திருப்பதால், அவற்றைத் தற்செயலாக நேர்ந்த ஒப்புமைகளெனத் தள்ளிவிடவுமுடியாது. அவற்றின் உண்மைத் தொடர்பைக் காட்டுதற்கு, மொழி நூலொடு வரலாறு முதலிய பிற சான்றுகளுமுள.

மேற்காட்டிய சொற்கட்கெல்லாம் மூலம் தென்மொழியே என்பது, பின்வரும் சொற்றொகுதியால் அறியலாகும்.

**குல்** என்பது வளைவுப் பொருள் தரும் ஒரு வேர்ச்சொல். அதனின்று, வளைவு கோணல் வட்டம் வளையம் உருட்சி திரட்சி, குழற்சி, சுழற்சி, சுற்றல், சூழல் முதலிய பல உறவியற் கருத்துள்ள பற்பல சொற்கள் தொடர்ந்து கிளைத்துள்ளன. அவை வருமாறு :—

குல்—குலா-குலவு-குலாவு. குலவுதல் — வளைதல்.

குல்—குர்-குர-குரம் — வட்டமான குதிரைக் குளம்பு. குரல்—வளைந்த தினைக்கதிர். குரகம் – வளைந்த கழுத்துள்ள நீர்ப் பறவை. குரங்கு—வளைவு கொக்கி. குரங்குதல்—வளைதல். குரவை— வட்டமாக நின்றாடுங் கூத்து—குரங்கு. குறங்கு—

கொக்கி. குறங்கு—கறங்கு. கறங்குதல்—சுழலுதல். கறங்கு—காற்றாடி. கறங்கல்—வளைதடி. கூ—அ, திரிபு, ஒப்புநோக்க. முடங்கு—மடங்கு. குடும்பு—கடும்பு. குறகு—வளைந்த கழுத்துள்ள கருவி.

குல்-குன்—குன்று. குன்றுத்தல்—உடம்பு கூனிப்போதல். குனி, குனிதல்—வளைதல், வணங்குதல். குனிப்பு—வளைந்தாடுங் கூத்து. குனுகு, குனுகுதல்—கடுஞ்சிரிப்பில் உடம்பு வளைதல் கூனல்—வளைவு முதுகுவளைவு. கூனி — வளைந்தசிற்றிறால், கூனை—கூனுள்ள தோற்சால்.

குல்-குளை-குளவி — கொடுக்குள்ள தேனீ. குளிகை — மருந்துருண்டை, வளைதடி, திரட்சி. குழல், குழலுதல்-சுருள்தல்.

குல் குண்—குண்டு—உருண்டை, உருட்சி திரட்சி. குண்டம்—உருண்டு திரண்ட பன்றி. குண்டன்—உருண்டு திரண்டவன், வளைந்தது. குண்டுசட்டி—உருண்ட சட்டி. குண்டா—குண்டு சட்டி. குண்டை—உருண்டு திரண்ட காளை, குண்டுசட்டி. குண்டலம்—வட்டம், சுன்னம் குண்டான காதணி.

குண்—குண—குணகு. குணகுதல்—வளைதல். குணங்கு. குணங்குதல்—வளைதல். குணக்கு — வளைவு. குணலை—உடல் வளைவு, வளைந்தாடுங் கூத்து. குணி—முடமானது. குணுக்கு—காதிலணியும் உலோக வளையம். குணுக்குதல்—வளைத்தல்.

குள்-குட்டு—முட்டை (தெலுங்குச் சொல்லான திசைச் சொல்) குடம் — உருட்சியானது, வளைவு. குட — வளைந்த. குடவு. குடவுதல்—வளைதல். குடக்கம்—வளைவு. குடக்கி — வளைவானது. குடக்கியன்—கூனன். குடங்கு—குடங்குதல்—வளைதல். குடந்தம்—வளைவு, வணக்கம். வழிபாடு. குடந்தை—வளைவு. குடா—வளைவானது. குடி—(வளைந்த) புருவம்.

குள்-குய்-குயம்—வளைந்த அரிவாள்.

குள்—கூள்—கூளி — வளைந்த வாழைப்பழம்.

கூள்—கூடு—வட்டமான நெற் களஞ்சியம்.

கூள்—கொள்—வளைந்த காயிலுள்ள காணம். கொள்—கொட்பு—சுழற்சி, சுற்றுதல். கொட்கு-கொட்குதல்—சுற்றுதல். (கொட்கி) — கொக்கி — வளைந்த மாட்டூறப்பு. (கொட்கு) — கொக்கு — வளைந்த கழுத்துள்ள ஒரு நீர்ப்பறவை வகை. கொக்கை—கொக்கி. கொட்டு — நெற்கூடு. கொட்டாரம் — களஞ்சியமுள்ள நிலம்.

கொட்டை—உருண்டை வடிவம். உருண்டு திரண்ட விதை, உருண்டைத் தலையணை.

கொடு—வளைந்த. கொடுமரம்—வில்;

# "ஒப்பில் வழியாற் பொருள் செய்குந"

திரு. அடிகளாசிரியர்,
(தமிழ் விரிவுரையாளர்; கரந்தைப் புலவர் கல்லூரி.)

ஒல்காப் புலமைத் தொல்காப்பினுர் தாம் இயற்றிய தொல்காப்பியமென்னும் பழைய இலக்கண நூலுள்

"அவைதாம்
புணரிய னிலையிடைப் பொருணிலைக் குதநவும்
வினைசெயன் மருங்கிற் காலமொடு வருநவும்
வேற்றுமைப் பொருள்வயி னுருபா குநவும்
அசைநிலைக் கிளவி யாகி வருநவும்
இசைநிறைக் கிளவி யாகி வருநவும்
தத்தங் குறிப்பிற் பொருள்செய் குநவும்
ஒப்பில் வழியாற் பொருள்செய் குநவுமென்
றப்பண் பினவே நுவலுங் காலை".

(தொல். சொல். இடை. 2)

---

(17-ம் பக்கத் தொடர்ச்சி)

கொடுக்கு—வளைந்த முள்ளுறுப்பு. கொடுக்கன்—தேள். கொடுக்கி—தேட்கொடுக்கி (ஒரு செடி)

கொடி — வளைந்த தண்டுள்ள செடி.

கொடிறு—குறடு, குறடுபோன்ற வாயலகு.

குல்-(கூல்)-(கொல்)-கோல்—உருண்டு திரண்ட கொம்பு, கோற்றொடி—திரண்ட வளையல், கோலி—உருண்டை.

கொள்-கோள் —. உருண்டையான (அல்லது சுற்றிவரும்) விண்மீன். கோளம்—உருண்டை. கோளா—உருண்டையான சிற்றுண்டி வகை. கோளம் — கோரம்—வட்டில் (வட்டமான கலம்)

கோள்-கோண்-கோணுதல்-வளைதல், சாய்தல். கோணம்-சாய்வு, சாய்ந்த மூலை. கோணன்—கூனன். கோணல்—சாய்வு, நெளிவு. கோணை—சாய்வு, பிறழ்வு, கோணையன்—மதிபிறழ்ந் தவன், குதருக்கவாதி. கோண்—கோடு—வளைவு, கோடுதல்—வளைதல். கோடல்—வளைவு, வளைந்த இதழுள்ள காந்தட்பூ. கோடி — வளைவு. கோடை — காந்தள். கோட்டம் — வளைவு, மதிலாற் சூழப்பட்ட கோயில், நிலாவைச் சூழ்ந்த ஊர்கோள். கோட்டம்—கோட்டகம். கோட்டை—வட்டமான நெற் களஞ்சியம், மதிலாற் சூழப்பட்ட இடம், நிலாவைச் சூழ்ந்த ஒளி வட்டம்.

இக்குடும்பத்தைச் சேர்ந்த பிற சொற்களுமுள. விரிவஞ்சி இம்மட்டில் நிறுத்தப்பெற்றது.

என்னும் நூற்பாவுள் இடைச்சொல் ஏழு வகையினையுடைத்து என்று கூறியுள்ளனர். அவ் ஏழுள் ஒன்று ஒப்பில் வழியாற் பொருள் செய்யும் இடைச் சொல்லாகும். இவ் இடைச்சொல் எது என்று ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## இளம்பூரணர் கருத்து.

ஒப்பில் வழியாற் பொருள் செய்யும் இடைச்சொல்லாவது 'ஒப்பில் போலி' என்னும் இடைச்சொல்லே என்பது இளம்பூரணர் கருத்தாகும். அவர் இடையியல் முப்பதாம் நூற்பாவாகிய "ஒப்பில் போலியும் அப்பொருட்டாகும்" என்பதன் உரையுள் "இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், மேல் இடைச்சொல் எழுவகைய என்று நிறுத்தவற்றுள் 'ஒப்பில் போலி' என்னும் இடைச்சொல் உணர்த்துதல் நுதலிற்று" என்று கருத்துரைக்கொண்டு, "ஒப்பில் போலியாவது, ஒப்பில்லாத வழி ஒப்பித்த வாசகம் படவருவது என்பது" என்று விளக்கம் கூறி, "மங்கலம் என்பதோர் ஊர் உண்டுபோலும் மழ நாட்டுள், என ஒப்பில்லாத வழிப்போலும் என்றும் இடைச் சொல் வந்தவாறு என்று எடுத்துக் காட்டும் காட்டியுள்ளனர், 'பவளம் போலும் வாய்' என்றதனுள் பவளமாகிய உவமையின் சிவப்புப்போல வாயாகிய உவமேயத்தின் சிவப்பு உள்ளது என்பதை உணர்த்தப் 'போல்' என்னுஞ் சொல் வந்துள்ளது. இப்போல் ஒப்பு உள்வழி வந்துள்ளதாகையால் ஒப்புள்ள போலியாகும். 'மங்கலம் என்பதோர் ஊர் உண்டுபோலும்' என்பதனுள் வந்துள்ள 'போல்' என்பது மேற்காட்டியதைப்போல் ஒப்புமை உணர்த்தாமையால் இதனை 'ஒப்பில் போலி' என்று வழங்கலாயினர்.

இவ் ஒப்பில் போலியை ஒப்பில் வழியாற் பொருள் செய்யும் இடைச்சொல்லென்று இளம்பூரணர் கருதுகின்றார் என்பது முன்னே கூறப்பட்டது. ஆனால், ஒப்பு உள் வழிவரும் போலப்புரைய முதலான உவம உருபுகள் இடைச் சொற்களா அன்று என்பதை இளம்பூரணர் செய்த இடையியல் உரை கொண்டு அறிந்துகொள்ள இயலவில்லை.

உவமையியலில் உவமையுணர்த்தும் சொற்களைக் கூறும் பதினொன்றும் நூற்பா வுரையுள் "பல் குறிப்பின' என்றதனான் இவ்வுவமையுணர்த்துஞ் சொற்கள் பெயரெச்ச நீர்மையவாய் வருவனவும், வினையெச்ச நீர்மையவாய் வருவனவும், முற்று நீர்மையவாய் வருவனவும், இடைச்சொல் நீர்மையவாய் வருவனவும் எனக்கொள்க" என்று இளம்பூரணர் கூறுவதால் உவமையுணர்த்துஞ் சொற்களை இடைச் சொல்லென்று கருதினர் என்

பதை நாம் அறிந்துகொள்கின்றோம். ஆனால் இவ் உவம இடைச்சொற்களை இடைச்சொல் ஏழு வகையுள் எந்த வகையுள் அடக்குகின்றார் என்பதை அறிந்துகொள்ள இயலவில்லை.

## நேமிநாதர் கூறிய இடைச்சொல் வகை,

'நேமி நாதம்' என்னும் இலக்கண நூலார் இடைச்சொற்களைக் கூறும்பொழுது

"சாரியையாய் ஒன்றல், உருபாதல், தங்குறிப்பின்
நேரும் பொருளாதல், நின்றசையாய்ப்—பேர்தல்,
வினைச்சொற்கீ ருதல், இசைநிறைத்து மேவல்
அனைத்தே இடைச்சொல் அளவு" (நேமி. இடை. க)

என்று I ஆறுவகை இடைச்சொற்களையே கூறியுள்ளனர். ஒப்பில் வழியாற் பொருள் செய்யும் இடைச்சொல்லை அவர் கூறவில்லை. தொல்காப்பியர் ஒப்பில் வழியாற் பொருள் செய்யும் இடைச் சொல்லைச் சேர்த்து இடைச்சொல் ஏழுவகை என்று கூறியிருக்க, நேமிநாத நூலார் அதனை ஒழித்து ஆறுவகையென்று கூறுவானேன் என்று வினு எழும்புகின்றது. இதற்கு விடை நேமிநாத உரையாசிரியர் கீழ் வருமாறு கூறியுள்ளார்.

"பிறர் இடைச்சொல் வரும் வழி ஏழென்று சொல்ல, இந்நூலுடையார் ஒப்பில் போலியை (இளம். கருத்து) நீக்கியது என்னையோவெனின்:— 'ஒப்பில் போலியும் அப்பொருட் டாகும்' (தொல். சொல். இடை. ௩௦) என்றதனால் அஃது அசை நிலையுள்ளே அடங்குமாதலான் இங்குக்கொண்டதில்லை". (நேமி. இடை. க.) என்றனர்.

'ஒப்பில் போலியும் அப்பொருட்டு' என்றதனுள் அகரச் சுட்டு, மேல் நூற்பாவில் கூறிய பொருளைச் சுட்டுகின்றது. மேல் நூற்பா, 'ஆங்க உரையசை' என்பது. இந்நூற்பாவிற்கு இளம்பூரணர், "ஆங்க என்னும் இடைச்சொல் ஓர் கட்டுரைத் தொடர்பினிடை, அசைப் பொருள் படவரும்" என்று உரை கூறியுள்ளனர். அதனால், ஒப்பில் போலி (ஆங்க) என்பதைப்போல் அசை நிலையாய் வரும் என்பது அறியப் பெறுகின்றது. அங்ஙனம் வருமேயானால் அது, இடைச்சொல் வகையினுள் ஒன்றாகிய 'அசை நிலைக் கிளவியாகி வருநவும்' என்பதனுள்ளே அடங்கப்பெறுமன்றே. அங்ஙனம் அடங்கும் பொழுது 'ஒப்பில் வழியாற் பொருள் செய்குந, என்று ஓர் இடைச்சொல் வகையைக் கூறவேண்டுவதில்லை என்பது நேமி நாத நூலார்க்குக் கருத்து என்று அதன் உரையாசிரியர் கூறியுள்ளனர்.

---

I. நன்னூலார் எட்டு வகையாக இசைச்சொற்களை கூறியுள்ளார்.

## சேனாவரையர் கருத்து.

சொல்லதிகாரத்திற்கு நல்லுரை வகுத்த சேனாவரையர் இக்கருத்துக்களையெல்லாம் நன்கு நுணுகி ஆராய்ந்தார். ஒப்பில் வழியாற் பொருள் செய்குந 'ஒப்பில் போலி' என்னும் இடைச் சொல்லாயின் இவ் ஒப்பில் போலி அசை நிலையில் வரும் என்று கூறப்பட்டிருத்தலின் இது 'அசைநிலைக் கிளவியாகி வருநவும்' என்னும் இடைச்சொல் வகையிலேயே அடங்கப் பெறுமே! இது ஒப்பில்'போலியாயின் ஒப்பு உள்வழி வரும் 'போலப்புரைய அன்ன இன்ன' முதலிய இடைச் சொற்களெல்லாம் இடைச்சொல் வகை ஏழனுள் எதன்பாற்படும்? என்றெல்லாம் அவர் எண்ணத் தொடங்கினர்.

வேற்றுமை யியலுள் இரண்டாம் வேற்றுமை இன்ன இன்ன வாய்பாடுகளில் வரும் என்று கூறும்பொழுது 'ஒப்பு' என்னும் வாய்பாடொன்று தொல்காப்பியரால் கூறப்பெற்றுள்ளது. அதற்கு இளம்பூரணர் முதலான உரையாசிரியரெல்லாம் 'தாயை ஒக்கும்' 'தந்தையை ஒக்கும்' என்று எடுத்துக்காட்டுக் காட்டியுள்ளனர். இவற்றுள் தாயை, தந்தையை என்பவற்றினுள்ள இரண்டாம் வேற்றுமைக்கு முடிக்குஞ் சொல் 'ஒக்கும்' என்பதாகும் நூற்பாவுள் 'ஒப்பு' என்று வாய்பாடு சொல்லப்பட்டிருப்பினும் உரையாசிரியர்கள் தாயை ஒக்கும், தந்தையை ஒக்கும் என்று எடுத்துக் காட்டுக் காட்டியுள்ளதால் இரண்டாம் வேற்றுமைக்குள்ள ஒப்புவாய்பாட்டில் ஒக்கும் முதலான சொற்களும் வழங்கப்பட்டுவரும். ஆகவே இவற்றையெல்லாம் நினைவில் வைத்துக்கொண்ட சேனாவரையர், 'ஒப்பில் வழியாற் பொருள் செய்குநவும்' என்ற தொடர்க்கு விளக்கவுரை எழுதும்பொழுது "ஒக்குமென்னுஞ் சொல்லன்றே (இரண்டாம் வேற்றுமைக்குரிய) ஒப்புமையை யுணர்த்துவது; அச்சொல் ஆண்டின்மையான். (இரண்டாம் வேற்றுமைக்குரிய) ஒப்புமை தோன்றுமையான், ஒப்பில் வழியால் என்றார்; உவமையொடு பொருட்கு ஒப்பில்லையென்றாலரென்பது. ஒப்பில் வழியாற் பொருள் செய்குந வாவன, அன்ன, ஏய்ப்ப, உறழ, ஒப்ப என்பன முதலாகப் பொருளதிகாரத்துக் கூறப்பட்ட முப்பத்தாறனுள் (இரண்டாம் வேற்றுமைக்குரிய) ஒக்குமென்பதொழிய ஏனையவாம்" என்று தம் திரண்ட ஆராய்ச்சிக் கருத்தை மிக நுணுக்கமாய்க் கூறியுள்ளனர்.

பின்னும் அவர், எச்சவியலுள் 'உவமத் தொகையே உவம இயல' என்னும் நூற்பாவுரையுள் 'புலிப்பாய்த் துள்'

என்னும் உவமத் தொகை 'புலிப்பாய்த்துள் அன்ன பாய்த்துள்' எனத் தம் விரிப் பொருள் உணர்த்தியவாறு கண்டுகொள்க" என்று கூறி, "புலிப்பாய்த்துள் என்னும் அத்தொகை 'புலிப் பாய்த்துளை ஒக்கும் பாய்த்துள்' என இரண்டாம் வேற்றுமை விரிப்பொருளை உணர்த்துதலின் வேற்றுமைத் தொகையெனப் படும்; அதனல், உவமத் தொகையென ஒன்றில்லையெனின்" என்று தடை வினவை எழுப்பிக்கொண்டு, அதற்கு விடையாக,

"அற்றன்று; சொல்லுவார்க்குப் புலிப்பாய்த் துளை ஒக்கும் பாய்த்துள்' என்னும் இரண்டாம் வேற்றுமை விரிப்பொருள் கருத்தாயின் வேற்றுமைத் தொகையுமாம். அக்கருத்தின்றி 'புலிப்பாய்த்துள் அன்ன பாய்த்துள்' என இரண்டாம் வேற் றுமையோடு இயைபில்லாத உவம உருபு விரிப்பொருள் மேற் கருத்தாயின் உவமத் தொகையாவதல்லது வேற்றுமைத் தொகையாமாறில்லையென்க. என்னெனின்? உவம உருபு ஒப் பில் வழியாற் பொருள் செய்யும் இடைச் சொல்லாகாலான்', என்னும் பொருள்பட அவர் எழுதியுள்ள உரையை ஆராய்ந் தால், இரண்டாம் வேற்றுமைக்குரிய ஒப்புப் பொருளில் வாராது, உவமப் பொருளைக் காட்டிவரும் அன்ன, ஏய்ப்ப, உறழமுதலானவைகளே ஒப்பில் வழியாற் பொருள் செய்யும் இடைச் சொற்களாகும் என்பது நமக்குத் தெரியவருகின்றது.

## நச்சினுர்க்கினியர் கருத்து.

'ஒப்பில் வழியாற் பொருள் செய்வன' உவமை உருபு களே என்று நச்சினுர்க்கினியர் கருதினும், இச்சொற்றொ டர்க்கு அவர் வேறுவிதமாகப் பொருள் கருதியுள்ளார். அவர் பொருளியலிலுள்ள 'ஒப்பும் உருவும் வெறுப்பும் என்று' என்று தொடங்கும் நூற்பாவுள் 'நாட்டிய மரபின் நெஞ்சு கொளின் அல்லது காட்டலாகாப் பொருள வென்ப' என்னும் பகுதிக்கு "ஒப்பு முதலியனவெல்லாம் நாடக வழக்கத்தால் புலனெறி வழக்கஞ் செய்த முறைமையானே நெஞ்சு உணர்ந்து கொள்ளினன்றி, உலகியல் வழக்கால் ஒருவர்க்கொருவர் கட்புல னகக் காட்டப்படாத பொருளைப் பொருளாகவுடையவென்று கூறுவர் புலவர்" என்றும் அந்நூற்பாவுள் 'ஒப்பு' என்பதற் குப் பொருள் எழுதும்பொழுது, "ஒப்பாவது ஒத்த கிழவனும் கிழத்தியுமென்ற வழி அவரொப்புமை மனனுணர்வா னுணர்வ தன்றி மெய் வேறுபாடுபற்றிப் பொறியா னுணரலாகாதென்றது; தந்தையரொப்பர் மக்களென்பதும் அது" என்றும் உரை கூறி யுள்ளனர். அக்கருத்துக்கிசைய 'ஒப்பில் வழியாற் பொருள் செய்குந என்பதற்கு. "நாடக வழக்கினுன் உய்த்துணரினன்றி

உலகியல் வழக்கினல் காட்டப்படுவதோர் ஒப்பின்றி நின்ற ஒப்புமைப் பொருண்மையை உணர்த்திவரும் உவம உருபுகளும்" என்று உரை எழுதியுள்ளனர்.

## தெய்வச்சிலையார் கருத்து.

தொல்காப்பிய உரையாசிரியருள் ஒருவராகிய **தெய்வச்சிலையார்** 'ஒப்பில் வழியாற் பொருள்செய் குநவும்' என்பது, தத்தங் குறிப்பினல் பொருள் உணர்த்தி வருதலின்றிப் பொருத்தம் இல்லாதவிடத்துப் பொருள் உணர்த்துவனவும்" என்று ஒரு உரை கூறி, "ஒப்பில் வழி என்பதனை ஒரு சொல்லோடு பொருத்தமின்றித் தனி வந்துழி எனவும் பொருள் உரைப்பினும் அமையும்" என்று மற்றொரு உரையுங் கூறியுள்ளார்.

பின்னர் **அவர்** "அச்சம் பயமிலி காலம் பெருமையென், றப்பால் நான்கே கொன்னைச் சொல்லே" (தொல். சொல். இடை. ௯) என்னும் நூற்பாவுரையுள் 'கொன்முனை இரவூர் போல' என்பது அச்சமுணர நின்றது. 'கொன்னே கழிந்தன் றிளமையும்' என்புழிப் பயனின்மை யுணர நின்றது. 'கொன் வரல் வாடை' என்ற வழிக் காலத்து வருகிற வாடை எனக் காலமுணர நின்றது. இம்மூன்று சொல்லும் பெயர் வினையை யொட்டி வாராது தனிவந்து தத்தம் குறிப்பில் வழியாற் பொருளுணர்த்தி வுமையான் ஒப்பில் வழியாற் பொருள் செய்தன. பிறவும் இவ்வாறு வருவன அறிந்துகொள்க" என்றனர். **இவர்** உவமை உருபுகளை இடைச்சொல் வகையுள் எதன்பால் அடக்கிக்கொள்கின்றனர் என்பது தெரியவில்லை.

## முடிப்புரை.

**இளம்பூரணர்**, ஒப்புமை கருதாமல் அசை நிலையாய்வரும் 'போல்' என்னுஞ் சொல்லையும் **தெய்வச்சிலையார்** பெயர் வினையோடு ஒட்டி வாராது தனித்துவரும் கொன் முதலியன வற்றையும் ஒப்பில் வழியாற் பொருள் செய்யும் இடைச்சொல் என்றனர்.

**சேனுவரையரும் நச்சினர்க்கினியரும்** ஒப்பில் வழியாற் பொருள் செய்குந உவம உருபுகளே என்று கூறினும், 'ஒப்பில் வழியாற் பொருள் செய்குந' என்பதற்குச் சேனுவரையர் கூறும் உரை நல்ல கருத்துடையதாய் அமைந்துள்ளது. **இருவரும்** ஒப்பில் வழியாற் பொருள் செய்யும் இடைச்சொல் வேறு ஒப்பில் போலி வேறு என்னும் கருத்தினராவர்.

# தமிழ் இலக்கிய மரபுகள்.

இரா. இளந்திரையன், B. A. (Hons.)

மக்கள் கூடிவாழும் இயல்புடையவர்கள். அதனால் ஒருவர் கருத்தை மற்றவர் தெரிந்துகொள்ள வேண்டிய இன்றியமையாமை ஏற்படுகின்றது. இதை நிறைவு செய்ய மொழி தோன்றியது. சில குறிப்பிட்ட ஒலிகளுக்குக் குறிப்பிட்ட சில பொருட்களைத் தருவதே மொழி. 'பழம்' என்னும் ஒலி 'பழம்' என்னும் ஒரு பொருளைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. பிறவும இவ்வாறே; ஆனால் பழம் என்ற ஒலி ஏன் அந்தப் பொருளைக் குறிக்கவேண்டும் என்று யாரும் கேட்கவில்லை. அப்படிக் கேட்டிருந்தால் உலகில் மொழியே தோன்றியிருக்க இயலாது. ஒருவன் சொன்னான்; பிறர் அதனை அப்படியே ஏற்றுக்கொண்டனர்; அப்பொருளைக் குறிக்க அச்சொல்லையே தாங்களும் பயன்படுத்தினர். நாட்பட்ட பழக்கத்தால் சில ஒலிகள்—சொற்கள் சில பொருட்களைக் குறிப்பனவாக நிலை பெற்றன. வழிவழியாக வந்த மக்களும் அச்சொல்லை அப்பொருளைக் குறிக்கவே பயன்படுத்தலாயினர். இவ்வாறே சில நிகழ்ச்சிகளும் சில சொற்களால் குறிக்கப்பட்டன. இன்ன சொல் இன்ன பொருள் உடையது என்னும் இம்முறையே மரபு என்று சொல்லப்படுகின்றது.

'எந்தப் பொருளை எந்தச் சொல்லால் முன்னோர் வழங்கி வந்தார்களோ அம்முறையைப் பின்பற்றுதலே மரபு' ஆகும். இச் சொற் பொருள் மரபு ஒரு சமூகம் முழுவதற்கும் பொதுவாகிவிடுவதால் அதனைத் தனி ஒருவனோ சிலரோ மாற்ற இயலாது. மாற்ற முயன்றாலும் வெற்றிபெறாது. 'காயைக் 'கனி' என்றும் 'பாம்பைக் 'கொடி' என்றும் கூறி, பிறரும் நாம் எண்ணும் கருத்தையே,—நாம் கூற விரும்பும் பொருளையே கருதச் செய்தல் இயலாததொன்று. எனவேதான் மரபுநிலை திரியாதிருக்கவேண்டும் என்ற கொள்கை எங்கும் எப்போதும் வலியுறுத்தப்பட்டு வந்துள்ளது. ஆனால் இச் சொற்பொருள் மரபு என்றும் நிலைபெற்றியங்கும் ஒன்றன்று. சமூகத்தில் தோன்றும் கருத்து வளர்ச்சியாலும் பிற மொழிகளின் கலப்பாலும் மரபு நிலை மாறுபடும். **ஞாயிறு, கதிர்** என்னும் சொற்களால் குறிக்கப்பட்டு வந்த ஒரு பொருள் இப்போது '**சூரியன்**' என்ற சொல்லால் குறிக்கப்படுகின்றது. இதுபோலவே ஒரு பொரு

னைக் குறிக்க ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் இருப்பின் அவை காலப்போக்கில் ஏற்பட்ட மரபு மாறுதலைக் குறிக்கும். எனினும் இம்மாறுதல்கள் ஓரிருவரால் வலிதிற் புகுத்தப்படுதல் இல்லை. அவை தாமே தோன்றி வளர்ந்துவிடுகின்றன. கொள்கைகளின் கலப்புக்களாலும், அவற்றின் புதுமலர்ச்சிகளாலும் சமூகக் கலப்பினாலும் பல புதிய சொற்கள் பழைய மரபுச் சொற்களின் இடத்தைக் கைப்பற்றிக்கொள்ளுகின்றன. பின்னர் இலக்கியமும் அப்புதிய சொற்களையே மரபுச் சொற்களாகக் கொள்ளவேண்டிய நிலை ஏற்படுகின்றது. பழந்தமிழ் இலக்கியங்களிலுள்ள **வழக்கிழந்த சொற்கள்** யாவும் நமக்கு இந்த நிகழ்ச்சிகளையே நினைவூட்டுகின்றன. அன்றியும் மரபு என்பது நிலையான ஒன்றன்று என்பதும், அதனை நிலைபேறடையச் செய்வதோ, மாற்றிவிடுவதோ சமூகத்தின் பொதுச் செயலேயன்றித் தனிப்பட்டோரின் செயல் அன்றென்பதும் விளங்காமலில்லை.

சொல் மரபு போன்றே இலக்கியத்தில் வேறுசில மரபுகளும் உள்ளன. இவற்றை இலக்கிய ஆசிரியர்களே படைத்துக் கூறுகின்றனர் என்பர் ஒரு சாரார். படைத்துக் கூறுபவர் ஆசிரியர்களே யாயினும் அவர்கட்கு அவற்றைப் படைக்கும் ஊக்கம் தந்து, அவர் படைத்தவற்றை ஏற்று ஆதரவு தருவது சமூகமேயாகும். எனவே, சமூக வாழ்க்கை முறைகளிலிருந்து அம்மரபுகள் முகிழ்க்கின்றன என்பதே பொருந்தும். சமூகத்தில் இல்லாதவை மரபுகளாகா. அவை சமூகத்தால் மரபுகளாக ஏற்றுக்கொள்ளப்படுவதுமில்லை.

இலக்கிய மரபுகளில் குறிப்பிடத்தக்க ஒன்று **பாத்திர மரபு** ஆகும். பழைய அகத்தமிழ் இலக்கியங்களில் தலைவன், தலைவி, பாணன், விறலி, தோழி, பாங்கன், செவிலி, தாய் முதலிய பாத்திரங்கள் இடம் பெற்றுள்ளமை நமக்கு வியப்பை ஊட்டுகின்றது; 'பாணனாவது செவிலியாவது; இவை வெறும் கற்பனைப் படைப்புக்கள் என்று முகந்திருப்பிக்கொள்ள நம்மில் சிலர் முற்பட்டிருக்கலாம். இவை இலக்கியப் பொதுத் தன்மை வழுவாதிருப்பதற்காகக் கையாளப்பட்ட மரபுகள் எனினும், இவற்றை ஆசிரியர்கள் வெறும் கற்பனையாகப் படைத்துவிடவில்லை என்பதையும் நாம் அறிதல் வேண்டும். **காதல்** என்னும் முக்கிய நிகழ்ச்சியில் இன்றியமையாத உறுப்பினர் இருவர். அவர்களே சிறப்புக் கருதித் '**தலைவன்**' '**தலைவி**' எனக் கொள்ளப்பட்டுள்ளனர். மற்றவர்களெல்லாம் இந்நிகழ்ச்சியின் வளர்ச்சிக்கு அவ்வப்போது துணை செய்பவர்கள். ஆதலால் அவர்கள் தத்தமக்குரிய பெயர்களால் குறிக்கப்பட்டுள்ளனர். 'பாணன்' விறலி' என்போர் பழந்தமிழ் மக்களின் வாழ்வில்

எந்த அளவுக்குத் தொடர்புகொண்டிருந்தனர் என்பதை இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன. அந்நூல்களில் கூறப்படுவோர் அன்றைய வாழ்வில் இருந்தவர்களே. தமிழர் வாழ்க்கை என்னும் நாடகத்தில் இவர்கள் யாவருமே பங்குகொண்டிருந்தனர். சங்கத் தமிழ் இலக்கியங்களின் போக்கை நோக்க, அவை பெரிதும் செல்வரின் வாழ்வை அடிப்படையாகக் கொண்டிருப்பது தெரிகின்றது. 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்று கருதிய சமூகம், நடுத்தர மக்களையும், ஏழை மக்களையும் இகழ்ந்தொதுக்கவில்லை எனினும், மன்னர் அல்லது மன்னரின் ஒத்த நிலையிலுள்ள செல்வரின் வாழ்க்கையையே நிலைக் களமாகக் கொண்டு இலக்கியம் செய்யப்பட்டுள்ளது என்பது உண்மை; அவ்வாறு நோக்கின் செவிலியும், பாணர், விறலியரும் வெறும் கற்பனைப் படைப்புக்களல்லர் என்பது விளங்கும். இதற்கு மாருக, பழந்தமிழ் இலக்கியங்கள் சமூக ஏற்றத் தாழ்வைக் காட்டவில்லை; அவை பொதுவான வாழ்க்கையையே காட்டிச் செல்லுகின்றன என்று கூறுவது, பேச்சுக்குப் பெருமை தருவதாக இருக்கலாம். ஆனால் அதே பேச்சு நம் இலக்கியத்தில் படிந்துள்ள வரலாற்று வண்ணத்தை அடியோடு மறைத்துவிடுகின்றது என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். எந்த நிலையிலுள்ள மக்களுக்கும் உள்ள பொதுவான சில உணர்ச்சிகளின்மேல் எழுந்த பாடல்கள் சங்க நூல்களில் உள்ளன என்பதை யாரும் மறுக்க ஒண்ணாது. எனினும் இலக்கிய மாபுகளாக அன்றைய சமூகம் வழங்கியுள்ள பாத்திரங்களையும் அவர்தம் செயல்களையும் இணைத்துப் பார்க்கும்போது செல்வ வாழ்வுடையோரைப்பற்றிய இலக்கியமே மிகுதியாகக் காணப்படுகின்றது. எனவே, "கட்டை வெட்டி விற்று வாழ்ந்த கந்தனுக்குப் பாணனும் பாங்கனும் எப்படி இருக்க இயலும்?"—ஓட்டைக் குடிசையில் ஒண்டிக் கிடந்து, காதலன் கந்தனின் வரவை எதிர் நோக்கியிருந்த செல்லியின் வாழ்விலே செவிலி எப்படி இடம்பெற இயலும்? — என்றெல்லாம் வினாக்களை எழுப்பி, 'அதனால் சங்க இலக்கியப் பாத்திரப் படைப்பு வெறும் இலக்கிய மரபே—அதற்கும் வாழ்க்கைக்கும் தொடர்பு இருந்ததில்லை' என்று கூறுதல் பொருந்தாது. அந்த இலக்கியம் எந்த வாழ்வைக் கூறுகின்றதோ அந்த வாழ்வில் இடம் பெற்றிருந்த பாத்திரங்களே பொதுப் பெயரில் அவ்விலக்கியத்தில் இடம்பெற்றுள்ளன. பொதுமை கருதிக் கொடுக்கப்பட்ட பொதுப் பெயர் ஒன்றுதான் இலக்கிய மரபு.

இனி, இப்பாத்திரங்கள் வெறும் இலக்கிய மரபேயானால் பின்னல் எழுந்த இலக்கியங்களுள்ளும் அவை அவ்வாறே இடம்

பெற்றிருக்க வேண்டுமன்றோ? அப்படி இல்லாதபோது அவை வாழ்க்கையிலிருந்து எடுக்கப்பட்ட பாத்திரங்கள் என்பதுதானே உறுதியாகிறது? ஆனால் இன்று சங்க இலக்கியத்தைக் கற்கப் புகுவோர் இவற்றை அன்றைய மரபுகள் என்று தெளிந்து கொண்டே அவற்றைத் தொடங்கவேண்டும். இன்று அவை இல்லாததால் அவற்றைப் பழைய மரபுகள் என்று எண்ணியே பழம் இலக்கியங்களை ஆராய்தல் வேண்டும்.

தமிழ் இலக்கிய மரபுகள் என்று கருதப்படுவனவற்றுள் **முதற் பொருள், கருப் பொருள், உரிப் பொருள்** என்பனவும் அடங்கும். அவற்றுள் முதற் பொருள் என்பது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்துவகை நிலப்பாகுபாடுகளும், தனித்தனியே அவ்வாறு பகுத்துக் கூறப்படும் பெரும் பொழுதும் சிறுபொழுதுமாகும். உரிப்பொருள் என்பது ஐந்துவகை நிலங்களிலும் நடைபெறுவனவாகக் கூறப்படும் காதல் நிகழ்ச்சிகளைக் குறிக்கும். அவை புணர்தல், பிரிதல், ஊடல், இருத்தல், இரங்கல் என்பனவாகும். அவை முறையே குறிஞ்சி, பாலை, மருதம், முல்லை, நெய்தல் ஆகிய இடங்களில் நடைபெறும் என்பதும் மரபு. கருப்பொருள்களாவன அவ்வந் நிலங்களிலுள்ள விலங்குகள், மரங்கள், பறவைகள், பறை, தொழில், யாழ், ஊர், உணவுப் பொருட்கள், நீர், பூ முதலியனவாம். இவற்றுள் அவ்வந் நிலத்துக்குரிய ஒழுக்கமும், அவற்றுக்கெனக்கொள்ளப்பட்ட பொழுதுகளும், அங்குள்ள கருப்பொருள்களும் முறை பிறழாது கூறப்படுதல் அன்றைய வழக்கம்; மரபு.

இவற்றுள் வெறும் இலக்கிய மரபுகள் எவை என்பதை ஆராயின் அவை மிகச் சிலவாகவே உள்ளன. நிலத்தை ஐந்து பகுதிகளாகப் பிரித்துக்கொண்டது வெறும் மரபன்று. இயற்கையோடு முழுமையும் ஒத்து வருவதே அப்பகுப்பு முறை. இன்றிருப்பது போன்ற அறிவியல் வளர்ச்சியும், ஒரு பகுதி மக்களுக்கும் மற்றொரு பகுதி மக்களுக்கும் நெருங்கிய தொடர்பும் இல்லாத அக்காலத்தில் இத்தகு பகுப்பு முறைகள், மக்கள் வாழ்க்கையில் இயல்பாகவே இருந்தன. அம்முறையை அன்றைய இலக்கியமும் பின்பற்றியிருக்கின்றது.

இனி, கருப்பொருள், உரிப்பொருள், பொழுதுகள் எனும் இவை நெருங்கிய தொடர்பு உடையவை. ஐவகை நிலங்களுக்கும் உரிய ஐவகை ஒழுக்கங்களும் நிலத்தின் அடிப்படையிலேயே பெயர் பெற்றுள்ளன. எனினும் அப்பெயரீடு முறை இலக்கிய ஆசிரியன் கற்பித்துக்கொண்ட மரபேயாகும். தக்க

காரணங்களுடனேயே ஆசிரியன் அவ்வாறு கற்பித்துக்கொண்டுள்ளான். நம் பழைய இலக்கியங்கள் தோன்றிய காலத்தில் தமிழர்கள் நாடு நகரங்கள் அமைத்து வாழத் தொடங்கிவிட்டனரெனினும் பழைய இயற்கை வாழ்வு, மணம்—அவ்வந் நிலங்களில் தங்கி அங்கங்குள்ள தொழில்களைச் செய்துவந்த வாழ்வின் இயல்பும் அடியோடு மாறிவிடவோ மறந்துவிடவோ இல்லை. பழைய புதிய வாழ்க்கை முறைகளை அடியொற்றி எழுந்த இலக்கியங்கள் பழைய வாழ்வின் இயல்புகளைப் பொருளாகவும் கொண்டு விளங்கலாயின. அவ்வாறு இலக்கியம் அமைப்பது எளிதாகவும் இருந்திருக்கலாம்.

ஐந்துவகை ஒழுக்கங்களும் ஒவ்வொரு நிலத்துக்கு ஒன்றாகக் கூறப்பட்டுள்ளன. இம்முறை மிகவும் செயற்கையாகக் காணப்படினும் ஆழ்ந்து நோக்கின் அதுவும் இயற்கையாதல் தெளிவு. புணர்தலும் புணர்தலுக்குரிய நிமித்தமும் **குறிஞ்சி ஒழுக்கம்** எனக் குறிக்கப்படுகின்றன. இதைக் கூறும்போது குறிஞ்சி நிலவருணனையும் அந்நிலப் பகுதியில் நடைபெறும் செயல்களுமே இணைத்துக் கூறப்படவேண்டும் என்ற வரையறை இருந்துள்ளது. குறிஞ்சி ஒழுக்கம் குறிஞ்சி நிலத்தில் நடப்பது சரியே என்பதை ஒத்துக்கொண்டால், குறிஞ்சியின் கருப்பொருட்களை கூறுவது முறையே என்பது மட்டுமன்றி இன்றியமையாததே என்றும் கூற நாம் முன்வருவோம். ஓரிடத்திய வாழ்வை முழுமைபடக் கூறவேண்டுமெனில் அங்குள்ள பொருட்களையும் நிகழ்ச்சிகளையும் முறைப்படி வருணித்தல் முறையே. அப்போதுதான் கூறப்படும் பொருளும் சிறக்கும்,

உருமேனிய நாடு மண்ணெண்ணெய்க்குப் பேர்பெற்றது; இங்கிலாந்து கடல் வாணிகத்திற் சிறந்தது; பிரேசில் நாடு காப்பிக்கொட்டையிற் பெயர்பெற்றது; சப்பானிய நாடு முயற்சிக்கு முதலிடம் தந்தது என்றெல்லாம் கூறுகின்றோம். இப்பண்புகள் பொருட்கள், செயல்களை நினைத்தவுடன் அவற்றால் பெயர்பெற்ற அந்தந்த நாடுகள் நம் நினைவில் தோன்றுகின்றன. ஆனால் குறிப்பிட்ட ஒரு நாட்டில் இங்குக் குறிப்பிட்ட ஒரு செயல்தவிர வேறு செயல்களே நடைபெறவில்லை என்பது பொருளன்று. இதுபோலவே ஐந்திணைகளுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிலத்திற்கு உரிமை செய்யப்பட்டிருப்பதனால், குறிஞ்சியில் பிரிவும், நெய்தலில் புணர்ச்சியும், மருதத்தில் இரங்கலும் நடைபெறுவதில்லை என்று கொள்ளுதல் ஆகாது. எல்லா ஒழுக்கங்களிலும் எல்லா நிலங்களிலும் நடைபெறுவது இயற்கை.

(அடுத்த இதழில் முடியும்)

சென்ற இதழின் தொடர்ச்சி.

# புயல்.

ஆசிரியர் : **செகப்பிரியர்.**

மொழிபெயர்ப்பாளர் : புலவர். **R. ஏகாம்பரநாதன்.**

## அங்கம்—4. களம்—1.

**வீரராசேந்திரன்** :— நான் காண்பதெல்லாம் தெய்வக் காட்சி, கேட்பனவெல்லாம் நிறை மொழிகள். மாலினி, நும் போன்று ஒரு துணையும், நும் தந்தையார் போன்று ஒரு சக்தி வாய்ந்த மாமனும் கிடைத்தால் இந்திரலோகம், சத்தியலோகம், வைகுண்டம், கைலாயம் இன்னும் மனிதனின் கற்பனையில் தோன்றும் எந்த உலக உயர்ந்த இன்பமும் நமது இன்பத்துக்குக் கீழ்ப்பட்டதாகவே இருக்கும்.

**சயசீலன்** :— வீரராசேந்திரா, சற்றுப் பொறுத்திருங்கள். இடையிடையே பேசினால் என் மந்திரசக்தி சிறிது குறைய நேரினும் நேரலாம்.

(இந்திராணியின் ஏவலால் பூமாலிகா சென்று நதிகளையும் குடியானவர்களையும் அழைத்து வருகிறாள்)

**கூலலட்சுமி** :— காவேரி, வையை, பொருநை, சிந்து, கோதாவரி, கங்கா, யமுனா, யாவரும் வாருங்கள். இந்திராணியம்மாளின் உத்தரவு ஒப்பற்ற காதலின் சேர்க்கை—இக்காதலர்களின் தெய்வ வாழ்வுக்கு நீங்கள் ஒவ்வொருவரும் வாழ்த்துக் கூறிவிட்டுச் செல்லுங்கள். (ஒவ்வொருவரும் வாழ்த்துக் கூறி விட்டுச் செல்கின்றனர்.)

குடியானவர்களே வைக்கோல் தொப்பியை மகிழ்வின் அடையாளமாகத் தலையில் மாட்டிக்கொண்டு பள்ளுப் பாடுங்கள். சிறிது கைகோத்தாடுங்கள். இவர்களின் தெய்வக் காதலின் எதிர்ப் பலனாக நாடு செழிக்கும் நீங்கள் மலைமலையாகக் கூலக் குவியல் பெறுவீர்கள். (யாவரும் ஆடுகின்றனர்)

**சயசீலன்** :— (திடுமென ஒரு ஒலி கேட்டுச் சிறிது நடுக்கத்துடன்) நிறுத்துங்கள், இப்போது நீங்கள் அனைவரும் செல்லலாம். உங்கள் காரியம் முடிந்தது. (அனைவரும் விடைபெற்றுச் செல்லுகின்றனர்) எனது சக்தியின் பெருமையில் என்னையே மறந்துவிட்டேன். அக்கலியன் இரண்டு ஊதாரிகளைக் கொண்டு என்னைக் கொல்ல எண்ணியிருக்கிறான். அவர்கள் குறித்த நேரமும் வந்துவிட்டது. அதைக் கவனிக்கவேண்டும்.

**வீரராசேந்திரன்** :— மாலினி, உன் தந்தையாருக்குத் திடுமென ஏதோ மாறுதல் தோன்றிவிட்டது. சற்றுக் கோபம் கூடக் காணப்படுகிறது. வந்தவர்களுக்கு நல்ல வரவேற்புமில்லை. மரியாதையுமில்லை. பிரிவிலும் இனிமையில்லை. 'ஊதாரிகளைக்கொண்டு கொல்ல' என்று எண்ணவோ தன்னைப்பற்றியும் கூறிக்கொண்டார். சக்தி நிறைந்த இவர் இவ்வாறு கூறிக்கொள்வதின் பொருள் எனக்கு ஒன்றும் விளங்கவில்லை.

**மாலினி** :— இதுகாறும் என் தந்தையாரை இந்த நிலையில் கண்டதே இல்லை. கோபமாகத்தான் இருக்கிறார்.

**சயசீலன்** :— மருகரே, நீங்கள் ஏன் கவல்கின்றீர்கள். நீங்கள் எதுபற்றியும் குழப்பம் அடையவேண்டுவதில்லை. மகிழ்ச்சியுடனே இருங்கள். இங்கு வாழ்த்துக் கூறியவர்களும், கைகோத்தாடியவர்களும் யாவரும் எனது மந்திர சக்தியால் தோற்றம்கொண்டு வந்த காத்தவராயர்களின் கூட்டமேயாம். எனது ஒரு நினைப்பில் உருவத்துடன் வந்தவை மற்றொரு நினைப்பில் காற்றுடன் கலந்தன. எனது முன்னேற்பாடான சில திட்டத்தை நடத்திக் காட்டினேன். இவை எல்லாம் உங்களுக்குக் கனவுபோல் தோன்றுகின்றனவா? அப்படியானால் விண்ணளாவும் கோபுரங்களும் கண்கவரும் விசாலமான அரண்மனைகளும், எண்ணற்ற மாளிகைகளும், ஏன், மலைகளும், தீவுகளும், பூமியும் எல்லாம் மறையக்கூடியவைதான். காலன் அறிந்தது. காலம் கூறும் உண்மைதான் இவை, கனவு ஒரு நுண்பொருள். நிலையற்றது. மக்களாகிய நாமும் நுண்பொருள்களின் சேர்க்கைதான். நிலையற்றவர்கள் தாம் நம் வாழ்நாள் ஒரு தூக்கத்தில் தான் முடியவுளது. எனக்கு அயர்ச்சியாக இருக்கிறது. நான் தளர்ந்த வயதினன் அல்லவா? அயர்ச்சி, தளர்ச்சி என்ற எனது வார்த்தைகளைக் கேட்டு நீங்கள் கவலையடைய வேண்டாம். எனது அறையுள் சென்று நீங்கள் இருவரும் சற்று ஓய்வு கொள்ளுங்கள். நான் சற்று உலவி வருவேன்.

**மாலினி** :— அப்பா, எங்களுக்கென்ன ஓய்வு. தாங்கள் சுகமாக இருந்தால் அதுவே எங்களுக்கு அமைதி இன்பம் எல்லாமாகும். தாங்கள் எங்கு உலவப்போகிறீர்கள்? இங்கேயே சற்றுத் தங்கி இளைப்பாறுங்கள்.

**சயசீலன்** :— என்னைப்பற்றிய பொறுப்பு உங்களிடம் நான் கொடுக்கவில்லையே. நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் எனது அறைக்குச் செல்லுங்கள்.

(அவர்கள் சென்றதும்—அறைக்கு வெளியில்)

**சுயசீலன் :—** காத்தவா, கலியனைக் காணவேண்டாமா?

**காத்தவன் :—** ஐயா, வாழ்த்து நடந்தபோதே இதுபற்றிச் சொல்ல வெண்ணி யெண்ணி வாய்ப்புக் கருதியே வாளா இருந்துவிட்டேன் கலியன், திருக்கு, கணேசன் மூவரையுமே எனது இசையொலியால் இழுத்து வந்தேன். காதை விரைத்து, மூக்கைத் துறுத்தி, கண்கொட்டாது தொடரும் மிருகங்கள் போல் கல்லிலும் முள்ளிலும் ஒலியைத் தொடர்ந்து வந்தனர். உடை கிழிந்து, உடம்பெல்லாம் கீறல்கொண்டு நமது அறைக் கும் பின்னால் உள்ள கும்பியில் பாசி படர்ந்த குட்டையில் நிற் கின்றார்கள். ஆனால் நாற்றம் பொறுக்காமல் அதினின்றும் இப்போதுதான் கரையேறுகிறார்கள்.

**சயசீலன் :—** சரி, அவர்கள் கண்ணில் படும்படி இங்கு ஒரு கொடி கட்டி அதில் நல்ல உடைகளைப் போட்டுவை. தவ றுதல் காணுமல் தண்டனை கொடுக்கக் கூடாதல்லவா?

**காத்தவ :—** கணத்தில் செய்துவைப்பேன். ஆனால் கலியன் அவர்கள் மூலம் தங்களைக் கொலை செய்வதற்குப் 'பகீ ரதப் பிரயத்தனம்' செய்கிறான்.

**சயசீலன் :—** அவனை நல்வழிக்குக் கொண்டுவர எவ் வளவோ முயன்றேன். அவனை ஒரு மனிதனுக்கத் திட்டமிட் டேன். எல்லாம் வீண். அவனைத் திருத்தும் அளவில் என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆண்டு முதிர முதிர அவன் உடலில் தடிப்பு ஏறஏற அவனது குணமும் முரண்பட்ட வழியி லேயே வளர்கின்றது. பாவம் அவனும் அவனுடன் சேர்ந்த வரும் அனுபவிக்க வேண்டியவற்றை அனுபவித்துத்தானே ஆகவேண்டும். விரைவில் சென்று உடைகளை மாட்டிவை

(உடைகள் தொங்கவிடப்பட்டுள்ளன — அதற்கு முன்னால் கலியன், திருக்கு, கணேசன் மூவரும் பழுதுபட்ட உடைகளு டன் வருகின்றனர்)

**கலியன் :—** மெதுவாக நடவுங்கள். சுண்டெலிக்குக் கூடக் காதில் விழக்கூடாது. அவர் தூங்கும் அறைக்கும் பக்கத் துக்கு வந்துவிட்டோம். கத்தியைத் தயாராக வைத்துக்கொள் ளுங்கள்.

**கணேசன் :—** கலியா, என்னடா எவ்வளவு தொல்லைடா. உடம்பெல்லாம் ஈரம்; நாற்றம். உடையெல்லாம் கிழிஞ்சுபோயி எவ்வளவு துன்பமடா?

**திருக்கு:—** ஏய், இருபிறப்பு, கலியா உன் பேச்சைக் கேட்டு ஒருவனும் உருப்பிடப்போவதில்லை. எனக்கு நன்ருகத் தெரியுதடா ?

**கலியன் :—** ஐயா, தயவுசெய்து கொஞ்சம் பொறுமையாக இருங்கள். உங்களுக்காக நான் கொடுக்க இருக்கும் இலாபம் உங்கள் கையில் கிடைத்துவிட்டால் இத்தொல்லையெல்லாம் உடனே மறைந்துபோம். தயவுசெய்து அமைதியாக இருங்கள். நடுநிசி எல்லாம் அமைதியாக இருக்கிறது நமது காரியத்தை விரைவில் முடிக்கவேண்டும்.

**திருக்கு :—** சேற்றிலே நினைந்தது பெரிதல்ல. காய்ந்து போகும். உடைகள் கிழிந்துவிட்டன. அது போனுலும் போகட்டும். எனது கையிலிருந்த சாராயப் புட்டியை இழந்து விட்டேனே. அதைத் தேடியெடுத்துக்கொண்டு வரப்போகின்றேன் நான்.

**கணேசன் :—** கிடைக்கப்போகும் பலாக்காயை நம்பிக் கிடைத்திருந்த களாக்காயை விட்டது மூடத்தனம். அதைத் தேடியெடுக்கத்தான் வேண்டும்.

**கலியன் :—** எனது இராசக்களா, பெரிய ராசனே இது தான் வழி. இக்குகைவழியாக அமைதியாக உள்ளே போனுல் கொஞ்சம் பின்னுல்தான் அவர் அறை உளது; அவர் தூங்குவார். கத்தியால் கழுத்தை வெட்டவேண்டியதுதான், அவர் மந்திரமெல்லாம் தொலைந்துபோகும். அப்புரம் அரசாங்கம் உங்களுடையதுதான். யாருக்கும் நீங்கள்தான் ராசா. இந்தக் கலியன் அப்புரம் உங்கள் ஆள்தான். உயிர் உள்ளவரை கலியன் உங்கள் காலடியில்தான் இருப்பான். இது சத்தியம்.

**கணேசன் :—** எங்கே கலியா உன் கையைக்கொடு. எனது எண்ணத்தில் இரத்தக் கறை படிந்துவிட்டது. இனிமேல் காரியம் பெரிதல்ல.

**திருக்கு :—** கணேச மகராசா, தும்பிக்கை ஆள்வாரே, இதைப் பாருங்கள். புதிய ஆடைகள் தொங்குகின்றன. இதில் ஒன்றைக் கட்டிக்கொண்டுதான் நான் புட்டியைத் தேட எண்ணுகிறேன். புதிதாக அரசான நீங்கள் கட்டாயமாக நல்ல உடைகளைக் கட்டிக்கொள்ளுங்கள். ஆடையில்லா மனிதன் அரை மனிதன். மனிதனுக்கே குறைந்துவிட்டால் ராசா ஆவது எப்படி ?

(தொடரும்)